முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 | 14—6—57 | வெள்ளி | ஒலி 8

பறக்கிறார், பாரதப் பிரதமர்!



★★ 'அன்னை'யைக் காப்பாற்ற ஆயிரம் மைல் தாண்டி அயல் நாடு ஓடியது ஏன்?...இன்று மற்றவர் அனைவருக்கும் அந்த உரிமையை மறுப்பது ஏன்?

★★ முகத்தைக் காப்பதற்கு 'அயல்நாட்டுச் சரக்கு' உபயோகிப்பாராம்! ஆனால் உயிர் காப்பதற்கு அயல்நாட்டு மருந்தைத் தடை செய்வாராம்!

ஐயா, சுதேசியாரே! சுதேசியாரே! சுவர் இல்லாமலா சித்திரம் வரைவீர்!

அன்னை கஸ்தூரிபாய் கண்ணைத் திறக்கவில்லை; மூச்சு நின்றுவிடும் நிலை—டாக்டர்கள் கைவிரிக்கும் கட்டம்.

இந்திய உபகண்டமே கண்ணீர் வடித்தபடி நிற்கிறது. அன்னையை இன்னும் சற்று நேரத்தில் பறி கொடுக்க இருக்கும் சேய்களின் நிலையிலே கலங்கித் தவிக்கிறது.

தந்தைக்குத் துணையாக இருந்தாரே; அவரது ஊன்றுகோலைப் போல தந்தையைவிட்டு இணை பிரியாது, சோர்ந்த நேரத்தில் ஊக்கம் தந்து, தொண்டு செய்வதற்கு மேன்மேலும் ஊக்குவித்தாரே; அய்யகோ! அவர் போய் விட்டால் தந்தை என்ன செய்வார்? கரமிழந்தவன் நிலையிலே சதறி அழுவாரே!—என்று எண்ணி எண்ணி மனம் நொந்தார்கள்! • குணக்குன்று நிகர் அன்னையின் ஆவியை எப்படியாவது அவர் உடற்கூண்டிலே தேக்கி வைக்க வேண்டுமே என்று எம்பெருமானை நோக்கிக் கடுந்தவம் இயற்றினார்கள்! பிரார்த்தனை கீதம் பாடினார்கள்!

முடிவிலே ஒரு டாக்டர் வந்தார்.

அன்னியத் துணிகளைக் கூடை கூடையாகக் கொட்டி கொளுத்தி மகிழ்ந்தவர்களின் தலைவராம் காந்தியாரை அணுகினார்.

"அன்னை உயிர் பிழைக்க வேண்டுமானால் அன்னிய நாட்டிலே இப்போதுதான் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட 'பென்சிலின்' மருந்தை வரவழைக்க வேண்டும்! அதை விட்டால் வேறு வழியில்லை!"—என்றார் அந்த வைத்திய நிபுணர்!

★★★ அன்னியப் பொருள்கள் கூடாது என்று வெறுத்தவரின் மனைவிக்கு அன்னிய நாட்டிலே தயாரான மருந்தா?

★★★ சுதேசிகளையே உபயோகியுங்கள் என்று உபதேசித்தவரின் இல்லக் கிழத்தியின் உயிரைக் காப்பாற்ற ஒரு சுதேச மருந்தினால் முடியவில்லையா?

★★★ கைராட்டையே கதியென்று நாட்டின் மூலை முடுக்கிலெல்லாம் கடுமையான பிரச்சாரம் செய்தவரின் மனைவியைக் காப்பாற்ற விஞ்ஞானம் விளைவித்த பென்சிலினைக் கொடுப்பதா?

—இந்தக் கேள்விகள் எதுவுமே அந்த நேரம் எழவில்லை, காந்தியாரின் உத்தமச் சீடர்களுக்கு!

கட்டை வண்டிதான் தேவை என்றவரின் மனைவிக்காக ஆகாய விமானம் விரைந்து பறந்தது!

ஏன்?

கடல் தாண்டி பென்சிலின் மருந்து கொண்டு வருவதற்காக!

மருந்து வந்தது. ஆனால் அய்யகோ! அதற்குள் அன்னையார் கண்ணை மூடிவிட்டார்!

'ஆகா! இன்னும் சற்று முன்பாகப் பென்சிலின் வந்திருந்தால்—அல்லது பென்சிலின் வரும் வரைக்கும் அன்னையாரின் உடலில் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தால்—உயிர் காப்பாற்றப்பட்டிருக்குமே' காந்தியார் மனைவியை இழந்தவராகவும் — அவரது சீடர்கள் அன்னையை இழந்தவர்களாகவும் ஆகியிருக்க மாட்டார்களே—என்று கவலைப்பட்டார்கள்; கண்ணீர் வடித்தார்கள்; அனைவரும்!

—இது கஸ்தூரிபாயைப் பறிகொடுத்தபோது ஏற்பட்ட நிலை!

—அன்னிய நாட்டு மருந்து பென்சிலின் மட்டும் சற்று முன்னதாக வந்திருந்தால் அன்னையாரின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும் என்று அனைவருமே பேசினார்கள், அப்போது.

கஸ்தூரிபாயின் சாவு அன்னிய நாட்டிலே தயாராகும் சில விசேஷ மருந்துகளின் முக்கியத்துவத்தை உணர்த்திச் சென்றது!

வடநாட்டிலுள்ள எங்கேயோ ஒரு கிராமத்தில்—எங்கேயோ ஒரு குடிசையில் மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி என்ற சாதாரண குடியானவரின் மனைவி கஸ்தூரிபாய் இப்படி இறந்திருந்தால் அவருக்காக அவரது குடும்பத்தினர் கலங்கியிருப்பார்களே தவிர; உறவினர்கள், உற்ற நண்பர்கள் கவலைப்பட்டிருப்பார்களே ஒழிய; நாடு முழுவதும் அவருக்காகக் கண்ணீர் வடித்திருக்காது! கடல் தாண்டி அடுத்த நாட்டுக்காரர்கள் தங்கள் அனுதாபச் செய்தியை அனுப்பியிருக்கமாட்டார்கள்!

கஸ்தூரிபாய் நாட்டுக்கு ஒரு நல்ல வழிகாட்டி; காந்தியாரின் வாழ்க்கைத் துணைவியார்.

—அதற்காக விமானம் பறந்தது, பென்சிலின் மருந்து பெற்று வருவதற்காக!

கஸ்தூரிபாயின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஒரு அன்னிய நாட்டு மருந்து புராண காலத்துத் தன்வந்திரி தயாரித்த மருந்தைப்போல சக்தி பெற்றிருந்தது!

பென்சிலின் கொடுத்திருந்தால் கஸ்தூரிபாய் உயிர்பெற்றிருப்பாரோ; என்னவோ—அது வேறு விஷயம்!

ஆனால் அந்த நேரம் பென்சிலின் அவரது உயிரைக் காப்பாற்றும் சக்திபெற்றது என்றுதான் கருதப்பட்டது; நம்பப்பட்டது!

ஒரு அன்னிய நாட்டு மருந்துக்கு அவ்வளவு சக்தி! வலிமை! பெருமை!

—ஆனால் இதைத் தான் மறந்துவிட்டு அன்னிய நாட்டு மருந்துகள் அனைவற்றுக்குமே தடைவிதிக்கப் போகிறார். இந்திய உபகண்டத்தின் வர்த்தக அமைச்சர் மொரார்ஜி தேசாய்!

ஏன் அப்படித் தடை விதிக்கிறார் வர்த்தக அமைச்சர்?

★★ ஐந்தாண்டுத் திட்டத்திற்காக முக்கிய இயந்திரங்கள் முதலியன வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட இருக்கின்றன. அவைகளைத் தருவிப்பதற்கு வேறு சில பொருள்களை வாங்காமலிருந்தால்தான் வெளிநாட்டுச் செலாவணியை மீதப்படுத்தி; அவற்றை உபயோகிக்க முடியும். இந்த வர்த்தகக் கொள்கையின் விளைவாகத்தான் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படும் மருந்துகளும் தடை செய்யப்பட இருக்கின்றன!

சரி; அப்படியானால் உயிர் வாழ்வதற்கு மிக அத்யாவசியமாக இருந்துவரும் மருந்துகளைத் தடைப்படுத்துவதன் நோக்கம் என்ன?

★★ இது பற்றியும் அமைச்சர் ஒரு விசித்திரமான வியாக்யானம் அளித்திருக்கிறார்! அதாவது இந்நாட்டு மக்கட்தொகையில் நூற்றுக்குப் பத்து பேர்கூட அந்த வெளிநாட்டு மருந்து வகைகளை உபயோகிக்கும் நிலையில் இல்லையாம்; எனவே நூற்றுக்குத் தொண்ணூறுபேர் அந்த மருந்துகளைப் பயனபடுத்தாமல் உயிர் வாழ்கிறார்கள் என்றால், மீதமுள்ள பத்து பேரும் ஏன் அப்படி வாழக்கூடாது?— கேட்டிருக்கிறார் அமைச்சர்!

நூற்றுக்குப் பத்துக்கும் குறைந்தவர்கள்தான் வெளி

※ தொடர்ச்சி 5-ம் பக்கம்

தெய்வம் தப்பியது!

நாகையில் நடைபெற்ற நீலாயதாட்சி அம்மன் கோயில் தேரோட்ட விழாவில் தேர் தீ விபத்துக்கு ஆளாகியதாம். மக்கள் பீதியடைந்து ஆண்டவனையும் தேரையும் விட்டுவிட்டு ஓடினார்களாம். மக்கள்தான் பகவானின் சக்தியை உணர முடியாத பாமரர்கள்; அதனால் தீயைக்கண்டு ஓட்டம் பிடித்திருக்கிறார்கள்... ஆண்டவனுக்கு அருகாமையிலேயிருந்து அனுபவப் பூர்வமாக அவரது வல்லமையை உணர்ந்த பக்த சிரோன்மணிகளாம் குருக்கள்மார்களும் தேரிலிருந்து குதித்தோடி விட்டார்களாம். என்ன அக்கிரமம்—ஒன்று அவர்கள் கடவுளின் சக்தியை நம்பிப் பயமின்றித் தேரிலேயே இருந்திருக்க வேண்டும்—அல்லது சக்தியற்ற ஆண்டவனையாவது காப்பாற்றுவதற்கு முயற்சி செய்திருக்க வேண்டும். இரண்டும் செய்யாது குதித்து ஓட்டமெடுத்த குருக்கள்மார்களின் செய்கை உண்மையான பக்தர்களால் கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும். இறுதியில் தீயணைக்கும் படையினர் வந்து உதவியிராவிட்டால் தெய்வம் தேரோடு உருகிப் போயிருக்கும் என்று கோயில் அதிகாரிகள் ரகசியமாகப் பேசிக்கொள்கிறார்களாம்.

வெள்ளி 14—6—57 சென்னை

சீரழியும் செந்தமிழர்!

இலங்கைத் தமிழர்கள் வருகிற ஆகஸ்ட் திங்கள் தங்களது மொழியுரிமையைக் காப்பதற்காக மாபெரும் போராட்டமொன்றைத் துவங்க இருக்கிறார்கள்!

தமிழ்ப் பகுதிகளுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு கூட்டாட்சி முறை வேண்டும்!

சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழி என்ற சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும்!

தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் சிங்களவரைக் குடியேற்றுவது போன்ற சிங்கள மயமாக்கும் 'நாஜியிச'ப் போக்கினை விட்டுவிட வேண்டும்!

இலங்கையில் குடியேறியிருக்கும் தமிழர் அனைவருக்கும் குடியுரிமை வழங்க வேண்டும்!

—ஆகிய முக்கியமான நான்கு இலட்சியங்களைப் பெறுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி போர்க்கொடி உயர்த்தியிருக்கிறது.

வர இருக்கும் போராட்டத்திற்கு முன்னுரை தருவதைப்போல சென்ற கிழமை; சிங்கள மொழி மட்டும் அரசியல் மொழியாக்கப்பட்ட முதலாண்டுவிழா அன்று; தமிழர்கள் வாழும் இடங்களிலெல்லாம் 'துக்க விழா' கொண்டாடியிருக்கின்றனர்.

சிங்களத்தை சிம்மாசனத்தில் ஏற்றி; தமிழுக்குச் சரியாசனம் மறுப்பது தமிழர்களுக்கு இழைக்கப்படும் பச்சைத் துரோகம் என்பதைப் படம் பிடித்துக் காட்டுவதற்காக தமிழர் இல்லங்களிலெல்லாம்; கடைகளிலெல்லாம் கருப்புக் கொடிகள் சிங்களவெறியர்களின் குருட்டு மதியை உலகுக்கு அறிவிப்பதைப்போலப் பறந்திருக்கின்றன!

நியாயமான மொழியுரிமை மறுக்கப்பட்டிருக்கிற தமிழர்கள் அங்கே கொதிப்படைந்து போயிருக்கிறார்கள்.

—இது குறித்து பண்டித நேருவின் அரசாங்கம் என்ன கொள்கையை வகுத்திருக்கிறது; இலங்கையிலேயே தமிழர் போராட்டம் சண்ட மாருதமெனத் தோற்றமெடுத்தால்—அதன் காரணமாக முன்பு கோவாவிலே போர்த்துக்கீசிய இராணுவத்தினரால் நூற்றுக்கணக்கானவர் சுட்டுக் கொல்லப்பட்டதைப்போல பண்டார நாயகாவின் துரைத்தனம் தமிழர்கள்மீது தொடர்ந்த—காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைக் கணைகளைத் தொடுத்தால்-பச்சைத் தமிழராட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கிற காமராசராட்சி டெல்லியில் எப்படித் தன்னுடைய கொள்கையை அமைத்துக் கொள்ளும்; அவர்களது செயல்கள் பண்டார நாயகாவை மேலும் மேலும் அடக்குமுறை வெறிச் செயல்களை அமுல் நடத்துவதற்கு ஊக்குவிக்குமா அல்லது கண்டனம் தெரிவித்து தனது எதிர்ப்பைக் காட்டுமா—என்பவை இப்போது பிரச்சினைக்குரிய விஷயங்களாகவும்; இலங்கைத் தமிழரது வருங்கால நிலைமையை கவலைக்குரியதாக ஆக்குவதாகவும் அமைந்திருக்கின்றன.

பண்டார நாயகாவின் செயல்களோ அவரது நேர்மையை நல்லெண்ணம் கொண்டோர் அனைவரும் சந்தேகிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

போராட்டம் துவங்கப் போகிறோம்; நியாயமான உரிமைகளை நீங்கள் கொடுக்கத்தான் வேண்டும்—என்று கெஞ்சிக் கேட்டிடும் தமிழர் தலைவர்களுக்கு அவர் இதுவரை சரியான பதில் சொல்வதாகத் தெரியவில்லை.

பொதுவாக, பொதுமக்கள் சார்பாக—அவர்கள் நலத்திற்காகத் தொடுத்திடும் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு இரு வழிகளிருக்கின்றன.

ஒன்று; அவர்கள் தங்களது பிரச்சினையை எடுத்தோதும்போதெல்லாம் கேளாக் காதினராக இருந்து போர்க்கொடி உயர்த்தியபோது போலீசார்—இராணுவத்தினரின் துணையை நாடி அவர்களைப் பூண்டோடு ஒழித்துவிடப் பார்ப்பது—இது பச்சை இட்லரிச முறை! முசோலினி போன்ற பச்சை ஏகாதிபத்தியப் பித்தர்கள் கையாண்டு தோற்றுப்போன வழி!

இன்னொன்று; மந்திரி என்பதன் பொருள் மக்களின் பிரதிநிதி தான் என்பதை உணர்ந்து; உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் துடைப்பதற்கு மக்கள் தலைவர்களைச் சந்தித்து; அவர்களது குறைகளைத் தெரிந்து கொண்டு; அவைகளை நீக்குவதற்குப் பாடுபடுவது!

—இப்படிக் குறைகளைக் களைவதன் மூலம் போராட்டத்தை ஒழிக்கும் இந்த முறைதான் ஜனநாயக முறை!

பண்டாரநாயகாவிற்கு பண்புள்ள வழி பிடித்திருப்பதாகத் தெரியவில்லை; ஏனெனில் இதுவரை அவர் தமிழர் தலைவர்களது குறைகளை நேரில் கலந்து பேசி; சமாதானமாக ஒரு முடிவு காணுவதில் அவருக்கு அணுவளவும் அக்கரை இருப்பதாகப் புலப்படக் காணோம்!

மாறாக, சரித்திரத் தெருக்களின் ஓரத்திலே சாறெடுக்கப்பட்ட சக்கைகளாய் தூக்கி யெறியப்பட்டிருக்கும் சர்வாதிகாரிகளின் வழிமுறைதான் அவருக்குப் பிடித்திருப்பதாகத் தெரிகிறது.

உரிமை முழக்கமிடும் இலங்கைத் தமிழர்களின் குரல்வளையை நெறிப்பதற்கு பண்டார நாயகா ஒரு வலிமை மிக்க 'குண்டர் படை'யினைத் தனது கட்சித் தொண்டர் படை என்கிற பெயரிலே நிறுவப்போகிறாராம்!

எதிர்க் கட்சிக்காரர்களை அடக்குவதற்கும்; அடித்துக் கொல்வதற்கும்; பயங்கரச் சதிகள் நடத்தி அவர்களது கூட்டங்கள் நடைபெறாமல் செய்வதற்கும் இட்லரும் இப்படித்தான் தொண்டர் படை என்கிற பெயரிலே ரவுடிகளையும் கேடிகளையும் சேர்த்திருந்தான்!

—அதே வழியை அழகுறக் கையாள முயற்சிக்கிறார்; பண்டார நாயகா!

—இந்த இட்லர் வழி தற்காலிகமாக அவருக்கும்; அவர் பிரதிநிதியாக இருந்துவரும் மொழி வெறியர்களுக்கும் 'வெற்றி' தேடித் தந்தாலும் அது தற்காலிகமாகத்தான் இருக்கும்—என்பதை சிங்கள வெறியர்கள் மறந்துவிடக்கூடாது என்பதைத்தான் அறிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறோம்! ★

உணவு நிலைமை!

மேன்மை தங்கிய கவர்னர்பிரான் சென்னை சட்ட சபைகளின் கூட்டத்தைத் திறந்து வைக்கும்போது குறிப்பிட்டார்;

"மொத்தத்தில் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது!"

கவர்னர் மட்டுமல்ல; அரசாங்க அதிகாரிகள் ஒவ்வொருவரும் இதே பதிலைத்தான் கூறினார்கள்!

ஆனால் நிலைமை என்ன?

சென்னை மாநிலத்தில் இப்போது சுமார் 700 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு அனைவருக்கும் அரிசி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

உணவு நிலைமையிலே ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலைமை குறைந்திருக்கிறதென்றால் என்ன நடக்க வேண்டும்?

இந்த நியாய விலைக் கடைகள் தோன்றுவதற்கு அவசியம் இல்லாமற் போக வேண்டும்.

அல்லது இந்த நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையாவது குறைய வேண்டும்.

இப்போது என்ன நடந்திருக்கிறது?

மேலும் 300 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட இருக்கின்றன!

தெர்மா மீட்டரில் பாதரசம் உயர்ந்தால் ஜுரம் உயர்கிறது என்று அர்த்தம்!

அது போலவே நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையும் உயர்ந்தால் மார்க்கெட்டில் அரிசி விலை உயர்ந்து கொண்டே இருக்கிறது என்றுதான் அர்த்தம்!

அது மட்டுமா?

நியாய விலைக் கடைகளுக்கு மக்கள் சென்று வருவதைப் பயமுறுத்தும் வேலை ஒன்றும் நடைபெற இருக்கிறது!

இனி அரிசி வாங்க வருபவர்கள் கால் பகுதியோ அல்லது மூன்றில் ஒரு பகுதியோ கட்டாயமாகக் கோதுமை வாங்க வேண்டுமாம்! ஏன் இந்த நிலை?

உணவு தான்யங்களைப் பதுக்கி வைப்பவர்களுக்குப் பூரண சுதந்தரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

அதைத் தடுத்து நிறுத்த முடியாத இந்த அரசாங்கத்தை எப்படிப் பொதுமக்கள் திறமையான அரசாங்கம் என்று ஒத்துக் கொள்வார்கள்?



ஆண்டிகளின் ஆர்ப்பாட்டம்!

“ இந்தக் கானகத்திலே உள்ள புள்ளி மான்கள் அனைத்தும் நாங்கள் தூரத்தில் வரும்போதே புதர்களில் பதுங்கி விடுகின்றன; அல்லது பின்னங்கால் பிடரியில் அடிபட ஓடித் தப்பித்துக் கொள்கின்றன. இது மிகவும் அநியாயம். நாங்கள் பசியால் வாடுகிறோம்; பரிதவிக்கிறோம்.”

—என்று புலிக்குட்டிகளெல்லாம் காட்டரசனிடம் முறையிட்டு; கண்ணீர் வடித்தால் எப்படியிருக்கும்?

அப்படித்தான் இருக்கிறது பஞ்சாபிலேயுள்ள இந்தி வெறியர்கள் தங்கள் மாகாணத்திலே இந்திக்கு தக்க இடமில்லை என்று புலம்பி அழுது போர் தொடுத்திருப்பதும்!

அப்படிப் போர் தொடுத்திருப்பவர்கள் யாரென்று நினைக்கிறீர்கள்?

உண்மையிலேயே இந்தி மொழிமீது பற்றும் பாசமும் வைத்த இந்திப் பண்டிதர்களா? அந்த மொழியிலே பேசுவதையும் எழுதுவதையும் நாட்டுப் பணியாகக் கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றும் மக்கள் நண்பர்களா? இரவும் பகலும் அனவரதமும் மக்களது மாமன்றத்திலே நடமாடிக் கொண்டு; அவர்களது குறை போக்கும் நிறைமதி படைத்தவர்களா?

அல்ல அல்ல; காவியுடை தரித்த சன்யாசிகள் தங்களை ஆரிய சமாஜத்தில் சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டு இந்திக்கு வக்காளத்து வாங்குவதற்குப் புறப்பட்டிருக்கிறார்கள்!

குருமுகி எழுத்தில் எழுதப்படும் பஞ்சாப் மொழி ஆட்சி மொழியாயிருப்பதை உடனே ஒழிக்க வேண்டுமாம்!

தேவநகரி எழுத்தில் எழுதப்படும் இந்தி மொழியையே பஞ்சாப் மாநிலத்தின் ஆட்சி மொழியாகப் பிரகடனப் படுத்த வேண்டுமாம்!

—இதுதான் இவர்களது கோரிக்கை!

இந்த மொழி வெறிப் பிடித்தலையும் இந்திப் பித்தர்கள் —குறிப்பாக ஆரிய சமாஜ சன்யாசிகள் — அமிர்த சரசிலிருந்து தலைநகரை நோக்கி ‘யாத்திரை’ செல்லும் போராட்டத்தைத் துவங்கியிருக்கிறார்கள்!

அதுமட்டுமின்றி, நேரடி நடவடிக்கைகள் என்று கூறிக் கொண்டு பஞ்சாப் ‘செகரெட்டரியேட்’டின் முன்பாக சத்தியாகிரகமும் செய்திருக்கிறார்கள்!

அமைச்சர் ஒருவரை உள்ளே போகவிடாமலும் தடுத்திருக்கிறார்கள்!

அந்தத் தடுப்புக்கு ஆளான உதவிக் கல்வி அமைச்சர் சுமார் ஒருமணி நேரம் தனது அலுவலகத்திற்குள்ளே போகவும் முடியாமல்; வீடு திரும்பவும் முடியாமல் தத்தளித்துத் திண்டாடியிருக்கிறார்!

பிறகு போலிசார் வந்து; அவர்களையெல்லாம் அப்படியே தங்கள் லாரிகளில் ஏற்றியிருக்கின்றனர். காந்தியார் வழியைப் பின்பற்றிப் போராட்டம் நடத்துவதாகச் சொல்லிக் கொண்டு திரியும் அந்த ஆரிய சமாஜிகள் போலீஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டதும் அவர்களில் ஒருவர் மூன்று முறை வாகனத்தின் ஜன்னல் வழியாக வெளியில் குதிக்கவும் முயன்றாராம்!

அது தவிர இந்தச் சன்யாசிக் கும்பலைச் சேர்ந்த சுமார் பதினைந்து பேர் ஜூன் 12–ம் தேதியன்று கைதியாகி யிருக்கிறார்கள்!

—இந்தக் கிளர்ச்சியைக் கண்டு பஞ்சாபியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் மிகவும் கொதித்துப்போயிருக்கிறார்கள்.

உண்மையில் பஞ்சாபில் இந்தி புறக்கணிக்கப்படவில்லை. வேறெந்த மாகாணத்திலும் அது ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் இடத்தை இந்தி மொழி அந்த மாகாணத்திலும் பெற்றிருக்கிறது!

—இருந்தாலும் இந்தி வெறியர்கள் எப்படியாவது தாய் மொழியை உதைத்துத் தள்ளும் துரோக எண்ணத்தால் தூண்டப்பட்டு செயலாற்றுகிறார்கள்!

இருந்தாலும் மற்றவர்களைப் போல சிறிதும் அஞ்சாமல் பஞ்சாப் முதலமைச்சர் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்.

இந்தி மொழிக்கு இனிமேல் தரப்படும் ஒவ்வொரு சலுகையும் பஞ்சாபி மொழி வளர்ச்சிக்கு அடிக்கப்படும் சாவு மணியாகும்!

—முதலமைச்சர் பேச்சு கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் கருத்துக் குருடர்களது சிந்தனைக் கதவை நிச்சயம் திறக்கப் போவதில்லை. அதனால்தான் இந்தி வெறியர்கள் என்று சொல்லத்தக்க அந்தச் சன்யாசிகள் போராட்டம் தொடங்கியிருக்கிறார்கள்!

சன்யாசிகள் சத்யாக்கிரகம் செய்கிறார்களா? சோற்றுக்காக அவர்கள் போராடினாலும் கவலையில்லை; ஆனால் அவர்கள் மொழிக்காக, அதுவும் இதர மாநிலங்களில் பிராந்திய மொழியைக் குழி தோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கும் இந்தி மொழிக்காக மறியல் செய்கிறார்களா?

—என்று அடுக்கடுக்காய் கேள்விகள் கேட்டு மூக்கின் மேல் கைவிரல்கள் அனைத்தையும் வைத்து ஆச்சரியப்படுகிறீர்களா?

ஆச்சரியப்பட வேண்டாம்; இந்தச் சன்யாசிக் கூட்டத்தை சன்யாசி மடமாகி வரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு பிரபல பிரமுகர்தான் தூண்டி வருகிறாராம்!

இந்தச் சன்யாசிகளின் சூத்ரதாரியாக இருந்து வரும் அந்த நபரைச் சாதாரண ஆளென்று எண்ணிவிடாதீர்கள்!

பஞ்சாப் மாநிலக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் காரியதரிசியான சாட்சாத் வீரேந்திராதான் அதன் முக்கியத் தலைவராம்!

காங்கிரஸ்காரர்கள் போராட்டம் நடத்துகிறார்கள்!—வேடிக்கை! வேடிக்கை!!

—புள்ளிமான்கள் தப்பி விடுகின்றன என்று முறையிட்டுக் கொண்ட வேங்கைகளின் கூட்டத்திற்கும் இந்தக் காங்கிரஸ் கூட்டத்திற்கும் என்ன வித்யாசமிருக்கிறதென்று நினைக்கிறீர்கள்?

பாவம்; சன்யாசிகளின் துணையை நாடினால்தான் ஒரு போராட்டம் நடத்தலாம் என்கிற அளவுக்கு பஞ்சாப் காங்கிரஸ் பரிதாபகரமான நிலையை அடைந்திருக்கிறது!

இதில் என்ன பரிதாபப்படுவதற்கு இருக்கிறது? விடுதலை வீரர்கள் மட்டுமே நுழையலாம்; இதரர்கள் அடியெடுத்தும் வைக்கக் கூடாது—என்று ஒரு காலத்தில் விதி வகுத்து வைத்திருந்த காங்கிரஸ் கட்சியே இன்று மிட்டாக்களும், நவாபுகளும், மகாராஜாக்களும், அனுமதியின்றி நுழைகிற அளவுக்கு சன்யாசி மடமாகி விட்ட பிறகு. காங்கிரஸ் காரியதரிசி சன்யாசிகளின் உதவியை நாடியிருப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

—என்று கேட்கிறீர்களா? அதுவும் உண்மைதான்! ○

கொஞ்சம் அசைந்து கொடு!



அகில 'இந்தியக் காங்கிரஸ் கமிட்டி காங்கிரசுக்குப் புதிய பலம் தேடித் தருவதற்கு முடிவெடுத்தது.

—‘சங்கர்ஸ் வீக்லி’

உங்களுக்கு ஒன்று ஏற்பட்டால் உணர்வீரா உண்மை நிலை?

❋ 2-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டு மருந்துகளை உபயோகிக்கிறார்களாம்!

உண்மைதான்; நூற்றுக்கு நூறு பேருக்குமா—ஒரே சமயத்தில்—கடுமையான - அபாயகரமான வியாதிகள் வருகின்றன? சிலருக்குத்தான் அப்படிப்பட்ட வியாதிகள் தாக்குகின்றன; அந்தச் சிலர்தான் உள் நாட்டில் கிடைக்காத வெளிநாட்டு மருந்துகளை வாங்கும் நிலைமைக்குக் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள்!

அந்தப் பத்து சதவிகிதம் பேர்வழிகளிலே யார் யாரோ வருவார்கள்!

பணக்காரர்கள்தான் வெளிநாட்டு மருந்துகளை உபயோகிக்கிறார்கள்—என்று கூறிவிட முடியாது.

ஏனெனில் கஸ்தூரிபாய் போன்றவர்களுக்காகவும் வெளிநாட்டிலிருந்து மருந்து தருவிக்கப்பட்டிருக்கிறது!

வேடிக்கையாக இருக்கிறது மொராஜியின் நடவடிக்கை!

ஆடம்பரப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைப்பதைத் தடை செய்யட்டும் மொரார்ஜி தேசாய்—நாடு அவரது செயலுக்குக் கண்டனம் தெரிவிக்காது!

ஜெமீன்தார்கள்; மிட்டாதார்கள்: மாஜி மன்னர்கள்—இவர்கள் உபயோகிக்கும் உல்லாசப் பொருள்களைத் தருவிக்காதே என்று கட்டுப்பாடு விதிக்கட்டும் வர்த்தக அமைச்சர்—நாடு அவருக்கு நல்வரவு கூறும்; வாழ்த்துச் சொல்லும்!

ஆனால் உயிரைப் பொறுத்த மிகமிக முக்கியமான வெளிநாட்டு மருந்துகளையும் தடை செய்ய வேண்டுமென்று கூறுவதிலே என்ன பொருளிருக்க முடியும்?

★★ கஸ்தூரிபாய் போன்ற ஒரு முக்கியமான உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஒரு முக்கியமான வெளிநாட்டு மருந்தொன்று கொடுக்கப்பட்டால்தான் உயிர் பிழைக்கும் என்கிறார்கள் டாக்டர்கள்.

★★ ஆனால், அந்த மருந்தோ மொரார்ஜியின் நடவடிக்கையால் இறக்குமதி செய்வது தடுக்கப்பட்டிருக்கிறது.

★★ இதுபோன்ற சூழ்நிலைகள் உருவாகி அந்த உயிர்—கஸ்தூரிபாய் போன்ற முக்கியமான உயிர்—அழியத்தான் வேண்டுமா?

★★ மருந்து, சாப்பிடுவதற்குக்கூட இந்தக் கேடுகெட்ட தரைத்தனத்தில் எனக்கு உரிமை கிடையாதா? அய்யோ, ஆண்டவனே! நீ இருந்துமா இந்தக் கொடுங்கோலர்கள் ஆட்சி நடத்துகிறார்கள்?—இதுபோன்ற வாழ்த்துச் செய்தியினைத்தான் சாகுந்தருவாயிலிருப்பவர்கள் காங்கிரசிற்கு வழங்கிவிட்டுச் செல்ல வேண்டுமா?

—மொரார்ஜியின் நடவடிக்கைகள் இதுபோன்ற சூழ்நிலையைத்தான் நாட்டிலே உருவாக்கப் போகிறது!

பத்து சதவீதம்தானே வெளிநாட்டு மருந்துகளை உபயோகிக்கிறார்கள் என்று கேட்கிறார் மொரார்ஜி!

ஆனால் அந்தப் பத்து சதவீதத்தினரும் மருந்து கிடைக்காத காரணத்தினால் மயானம் செல்கின்ற பரிதாப நிலைமையை இந்த நாட்டிலே ஏற்படுத்துவது முறையா? தகுமா? நீதியா? நேர்மையா?—என்பதையும் மொரார்ஜி சிந்தித்துப்பார்க்க வேண்டும்!

★★★ அதற்கு முன்பு ஒரு வார்த்தை! யார் இந்த மொரார்ஜி தேசாய்? வெளிநாட்டுச் செலாவணியை எப்படியாவது சேர்த்து வைக்க வேண்டுமென்று மந்திரம் ஜபித்தபடி இருக்கிறாரே; அவரது பவிஷுதனைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

★★, சில மாதங்களுக்குமுன் பாராளுமன்றத்திலே க்ஷவர பிளேடுகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது பற்றிய பிரச்சினை வந்தது.

அப்போது அங்கத்தினர் ஒருவர் எழுந்திருந்து "ஜில்லெட் பிளேடுகள் இறக்குமதியாவதைத் தடை செய்ய வேண்டும். அப்போதுதான் இந்தியாவில் தயாராகும் பிளேடுகள் தங்கள் உற்பத்தியையும், தரத்தையும் பெருக்கிக்கொள்ள வாய்ப்பு கிடைக்கும்"—என்று பேசினார்.

ஆனால் இதற்கு பொறுப்பு வாய்ந்த வர்த்தக அமைச்சர் மொரார்ஜி தேசாய் என்ன தெரியுமா கூறினார்?

"நான் இந்தியாவில் தயாராகும் பிளேடுகளை உபயோகித்து எனது முகத்தை வெட்டிக் கொள்ளத் தயாராக இல்லை!"

—மொரார்ஜியின் வாசகங்கள் இவை!

உள்நாட்டில் தயாராகும் பிளேடுகள் என்றால் அவை முகத்தை வெட்டும் தன்மை கொண்டவையாம்!

சுதேசிகளை உபயோகியுங்கள்—என்று சிங்கநாதம் எழுப்பி இன்று அரியணைக்கு வந்திருக்கும் மொரார்ஜி இந்தியாவில் தயாராகும் பிளேடுகளை உபயோகிக்க மாட்டாராம்!

அதன் காரணமாக அவர் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் ஜில்லெட் பிளேடுகளின் இறக்குமதியைத் தடை செய்யவோ அல்லது கட்டுப்படுத்தவோ மாட்டாராம்!

"நான் முகத்தை வெட்டிக் கொள்ளமாட்டேன்!"—மொரார்ஜி தேசாய் உரிமையுடன் கூற முடிகிறது!

ஆனால் அதே நேரம்; "நான் உயிரிழக்கமாட்டேன்; அதன் காரணமாக வெளிநாட்டிலிருந்து மருந்து இறக்குமதியைத் தடை செய்யாதீர்கள்!"—என்று கேட்டிடும் உரிமை இனிமேல் வேறொரு பிரஜைக்கு இல்லாமல் போய்விடும்!

தன்னுடைய முகம் நன்றாக இருக்க வேண்டும்; காயம்படாமல் தழும்பு ஏற்படாமல் திகழ வேண்டும்—என்று விரும்புவதால் ஓர் அமைச்சரினால் வெளிநாட்டிருந்து பிளேடு இறக்குமதியை அனுமதிக்க முடிகிறது!

ஆனால் தன்னுடைய உயிர் நிலைபெற்று இருக்க வேண்டும்; பிள்ளைக் குட்டிகளோடு அதிக நாள் வாழவேண்டும்; குடும்பத்தினரைப் பிச்சைக்காரர்களாக விழிபிலே நடன் வீதியிலே அலையவிடக்கூடாது—என்று மந்திரியல்லாத வேறொருவன் விரும்பி, அதன்படி இனிமேல் டாக்டரின் சிபார்சின் பேரில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நல்ல மருந்தினை வாங்கி உபயோகித்து தனது உள்ளக் கிடக்கையைத் தணித்துக் கொள்ள முடியாது!

—இந்த நிலைமை மாற வேண்டுமானால்; முக்கிய மருந்துகள் இறக்குமதியாவது தடை செய்யப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமானால்; கீழே குறிப்பிட்ட இரு நிகழ்ச்சிகளில் ஒன்று நடைபெற்றாக வேண்டும்:

(1) மொரார்ஜி தேசாயும், அவரது கொள்கையை வரவேற்கும் அமைச்சர் குழுவினரும் முன்பு கஸ்தூரிபாயின் உயிரைக் காப்பாற்றுவதற்காக வெளிநாட்டிலிருந்து பென்சிலின் வரவழைத்ததை சிந்தித்துப் பார்த்து; சித்தம் தெளியவேண்டும்.

(2) அல்லது மொரார்ஜி தேசாய்க்கோ; அல்லது இந்தக் கொள்கையை வரவேற்பவர்களுக்கோ அபாயகரமான நிலைமை தற்காலிகமாக ஏற்பட்டு; வெளிநாட்டு மருந்தொன்று கிடைத்தால்தான் தப்ப முடியுமென்று டாக்டர்கள் கூறவேண்டும்!

—இதில் இரண்டாவதை நாம் விரும்பவில்லை.

முன் குறிப்பிட்டதைப்போல கஸ்தூரிபாய்தான் மொரார்ஜியைப் பெரும் பிழையிலிருந்து காப்பாற்ற வேண்டும்!

—ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெறவேண்டியதுதான்.

ஐந்தாண்டுத் திட்டம் யாருக்காக? மக்களுக்காக!

அந்த மக்களை மடியவிட்டு திட்டம் தீட்டுவதிலே என்ன பொருளிருக்க முடியும்?

சுவர் இருந்தால்தானே சித்திரம்!

★ அனுதாபம் - இரு பக்கங்களிலும்! ★

அன்புள்ள பொன்முடி!

நான் வரைந்த மடல் மிகத் தாமதமாகவே கிடைத்தது என எழுதியிருக்கிறாய். தாமதமாகவாவது கிடைத்ததே; அதற்காக இருவரும் மகிழ்ச்சி அடைவோம் கடிதம் என்ன ஊசிப்போகிற பண்டமா என்று அஞ்சல் நிலையத்தார் நினைத்துவிடுகிற காரணத்தால் கடிதங்கள் ஊசியும் போகாமல், போகவேண்டிய ஊருக்கும் போகாமல் உறங்கிக் கொண்டிருக்கின்றன போலும்! பழைய காலத்தில் குதிரைத் தபால்—புறுத் தபால் முறைகளையெல்லாம் இப்போது நாம் பாராட்டத்தான் வேண்டும். கடமையுணர்ச்சியோடு 'தங்கள் அலுவல்களை அவைகள் கவனித்திருக்கின்றன. செல்லும் வழியில் விரோதியின் கண்ணிலோ— வேடன் கணையிலோ அகப்படாதிருந்தால் அவைகளின் வேலை ஒழுங்காகவே நடைபெறுமாம். ஆனால் ஒன்று; அவைகளுக்குக் குறைகள் இல்லை—குறைகள் இருந்தாலும் எடுத்துச் சொல்ல வாயில்லை — வழியில்லை! இப்போதோ நமது கடிதங்கள் செல்லும் வழியில் எத்தனையோ அஞ்சலக ஊழியர்களின் கண்ணீரால் நனைகின்றன. அவ்வளவு வேதனையோடு விழிநீர் பெருக, வேலையில் ஈடுபட்டு வாடுகிற தோழர்களை இந்த நாட்டில் எல்லா அலுவலகங்களிலும் காணுகிறோம். அதன் விளைவாகக் காரியங்கள் ஒழுங்காக நடைபெற முடிவதில்லை.

நான் எழுதிய 'கடிதம் உனக்குத் தாமதமாகக்கிடைக்கிறது. இன்னும் சிலருக்கு நான் எழுதியதும், அவர்கள் எனக்கு எழுதியதும் கிடைக்காமலே போய் விட்டது குமுறியமும் உள்ளத்தைத் திறந்து காட்டுவதற்கும்—குறைகளைத் தெரிவிப்பதற்கும் இப்படியொரு முறை கடைப்பிடிக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல; அக்கறையற்ற தன்மையும் அலட்சியப் போக்குங்கூட இந்த விளைவுகளுக்குக் காரணமாக இருக்கக் கூடுமென்றே கருத இடமேற்படுகிறது

ஒரு அஞ்சலட்டையைவாங்கி மகள் குழந்தை பெற்றிருக்கிறாள் என்ற சேதியை மருமகனுக்கு எழுதுகிற ஏழைப்பாட்டாளி. ஒரு வாரமாகியும் மருமகன் வந்து பார்க்காததுகண்டு ஆத்திரமடைகிறான். அன்புச் செல்வத்தை ஈன்ற குடும்ப விளக்கும் கண்ணீர் பெருக்குகிறாள்; அத்தான் வந்து குழந்தையைப் பார்க்க வில்லையே என்று!

காரணம் என்ன? செய்தியைத் தாங்கிச் சென்ற அஞ்சலட்டை ஏதோ ஒரு ஊரில் எங்கேயோ ஒரு மூலையில் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறது.

பிள்ளை பிறந்த சேதியாவது போகட்டும்; பிள்ளைக் கனியமுது இறந்த சேதியை வெளியூருக்குப போன தந்தைக்கு எடுத்துச் சென்ற மரண ஓலைகள் வழியிலே அகால மரணத்திற்கு ஆளாகி விடுவதால்— சேதியை ஏன் தெரிவிக்கவில்லையென்று சீறியெழும் தந்தையும் சிந்துகின்ற கண்ணீரைத் துடைத்தவாறு "தெரிவித்தேன்; நீங்கள் வராமலிருந்து விட்டுப் பொய் வேறு கூறுகிறீர்களா?" என்று புலம்புகின்ற தாயும் அஞ்சல் நிலையத்தாரின் அகக்கண்ணிலே சோக உருவங்களாகக் காட்சியளிப்பார்கள்; நிலைய அலுவலாளர் சற்று சிந்தனைக்கு இடம் கொடுத்தால்!

தகவலைக் கடித வாயிலாகத் தெரிவித்து விட்டோம்; செய்தியை அறிந்திருப்பார்கள் –என நம்பி, எதிர்பார்த்திருப்பவர்கள் எவ்வளவு ஏமாற்றத்திற்கு ஆளாகி விட நேரிடுகிறது என்பதைப் பொறுப்புணர்ச்சியற்றவர்கள் சற்று நினைவு கூர்தல் நலம்.

உனக்குக் கடிதம் எழுத ஆரம்பித்து எதையோ எழுதிக் கொண்டு போகிறேன் போலிருக்கிறதே–பரவாயில்லை; நான் உனக்கு எழுதும் கடிதங்களை வழியிலே பலர் படித்துப் பார்க்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அப்படிப் படிக்கிறவர்கள், கடிதத்தை உன்னிடம் கொடுத்தால் சரி; அதுவே போதும்! இந்தக் கடிதத்தைப் படிக்கிறவர்கள் தங்கள் தவறை உணர்ந்து, அலட்சியப் போக்கைத் துறந்து கடமையுணர்ச்சிக்கு முதலிடம் தருவார்களேயானால் கடிதம் எழுதிய எனக்கும் களிப்பு— பொது மக்களுடைய அனுதாபமும் அவர்கள் பக்கம் நிரந்தரமாக இருக்கும் என்பதற்காகவே இதைக் குறிப்பிடு[கி]றேனே தவிர வேறில்லை.

தேம்ஸ் நதி தீரத்தில் ஏக்க[த்]தோடு நின்று கொண்டிருக்கி[ற] காதலனையும், சென்னைக் கட[ற்] கரையின் வெண் மணலி[ல்] நின்றவாறு அசைந்தாடும் அ[லை]களில் விழியோட்டி நிற்கின்[ற] காதலியையும்—" கடிதம்" தானே சந்திக்க வைத்து பெ[ரு]மூச்சு கலந்த ஆறுதலை யளி[க்]கிறது பொன்முடி! இலங்கை[ச்] சீமையிலே தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து வயி[று] கழுவும் திருக்குமாரன் சுகமா[க] யிருக்கிறானா எனத் தனக்கு[த்] தானே கேட்டுக்கொண்டு ஆண்டவன் அவன் தலையில் அப்ப[டி] எழுதினானே என முணு[மு]ணுத்து, கண்ணீர் முத்து ச[ிந்]தியவாறு தெரு வாயிலி[ல்] நின்று தபால்காரர் வர[வை]ப் பார்க்கும் கிழத் தாயாருக்கு அன்பு மகனின் கைப்பட எ[ழு]தப்பட்ட முக்காலணா கார்[டு] தானே பொன்முடி; புன்மு[று]வலை வரவழைக்கிறது! எ[ங்]கேயோ ஒரு குடிலின் வாயிலி[ல்] குடுகுடு கிழவியொருத்தியி[ன்] பொக்கை வாயில் பொங்[கு]கின்ற அந்தப் புன்னகையை அழித்துவிடக்கூடியதல்லவ[ா] அஞ்சலகத்தில் காட்டப்ப[டு]கிற அலட்சியப் போக்கு! இரு[க்]கலாமா அந்தப் போக்கு? வள[ர]லாமா அந்தப் போக்கு?

"முத்தாரம்" இதழுக்[கு] திருவண்ணாமலை நண்பர் ப. உ[.] சண்முகம் அவர்கள் "சாவோலை" என்ற ஒரு அருமை[யா]யான கதை அனுப்பியிருந்தா[]ராம். அரும்பாடுபட்டு சிந்[த]னையை செலவிட்டு ஈரிரவு கண் விழித்து எழுதினாராம். நேரில் வந்து சொன்னார். ஆனால் அவர் அனுப்பிய "சாவோலை" வழியிலேயே செத்து விட்டது.

இதோ உனக்கு நான் 'நீட்டோலை' தீட்டிக் கொண்டிருக்கிறேன்; இதுவே உனக்குக் கிடைக்கிறதோ இல்லையோ— யார் கண்டது? அப்படிக் கிடைக்காவிட்டால் எனக்கு எழுதாதே, கிடைக்கவில்லையென்று! ஒரு வேளை அதுவும் கிடைக்காமல் போய்விடும்.

அதனால் நேராக இங்கு சென்னைக்கே வந்து என்னிடம் சொல்லு! எப்படி வருவது? ரயிலில்தானே வரவேண்டும்— இப்போதுதானே "அரியலூ[ரு]"க்குப் பிறகு, "பம்பாய்" நடந்திருக்கிறது—பயமாயிருக்கிறதே என்று கூறிவிடாதே! என்ன செய்வது? சுதந்திர (?) ஆட்சியில் தபால்களும் தந்திகளும் தங்கள் மனம்போல் திரிவதற்குச் சுதந்திரம்! ரயில்கள் ஆற்றில் குதிப்பதற்கும், ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொண்டு "கடாச் சண்டை" போடுவதற்கும் சுதந்திரம்!

அஞ்சல் நிலைய "அவலட்சணம்"!

சென்னையிலிருந்து அஞ்சல் மூலம் அனுப்பப்படுகிற "முரசொலி" விற்பனையாளர் பிரதிகளும், சந்தாதார் பிரதிகளும் மிக மிகக் காலதாமதமாகக் கிடைக்கின்றன என்று ஆதாரப் பூர்வமாக வெளியூர்களில் இருந்து நமக்கு நாள்தோறும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

ஒரு சில பொறுப்பற்ற விற்பனையாளர்கள் குறையுள்ள இடத்தைப் புரிந்து கொள்ளாது, அலுவலகத்திற்கு "முரசொலி" கட்டுகளைத் திருப்பி அனுப்பி விடுகின்ற செயலில் ஈடுபடுகின்றனர்.

உதாரணமாக, சென்னையில் 1—6—57-ம் நாள் அனுப்பப்பட்ட "சங்கரி துர்க்கம்" விற்பனையாளருக்கான பத்திரிகை 3—6—57-ம் நாள் சேந்தமங்கலம் என்ற ஊரில் முத்திரை குத்தப்பட்டு, பின்னர் 12—6—57-ம் நாள் சங்கரி துர்க்கம் சென்று, அந்த விற்பனையாளர் தாமதத்தைக் காரணம் காட்டி அலுவலகத்திற்கே திருப்பி அனுப்பி விட்டார்.

அடுத்து, 1—6—57-ல் சென்னையில் அனுப்பப்பட்ட கமுதி (ராமநாதபுரம் மாவட்டம்) விற்பனையாளர் பத்திரிகை, 7—6—57-ல்தான் கமுதிக்குக் கிடைத்திருப்பதாக அந்த விற்பனையாளர் முத்திரைக் குறிப்புகளுடன் ஆதாரம் அனுப்பியிருக்கிறார்.

இன்னொன்று; சென்னை திருவல்லிக்கேணியிலிருந்து நமக்கு 1—6—57-ம் நாள் அனுப்பப்பட்ட "சினிமா டைம்ஸ்" என்ற ஏடு, 11—6—57-ம் நாள்-பத்துநாள் கழித்துக் கிடைத்திருக்கிறது.

அஞ்சல் நிலைய நிர்வாகம் இப்படியே தொடர்ந்து நடைபெறுவது - நமது ஏடுகளைப் பொறுத்த வரையில் அனுஷ்டிக்கப்படுகிற கொள்கையா? அல்லது எல்லோருக்கும் "பெப்பே"தானா என்பது புரியவில்லை.

- நிர்வாகி.

திட்டம் வருமுன்னும் வரி! வந்த பின்னும் வரி!

"எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு!
எல்லோர் உயிரும் ரயில்
விபத்தில் போச்சு!"

என்று இந்தியாவைப் பற்றிப் பக்கத்தில் உள்ள நாட்டினர் பாடினாலும் பாடக்கூடும்! ஏன், நம் நாட்டிலேயுள்ளோர் பாட மாட்டார்களா என்று கேட்காதே—ஆள் இருந்தால் அல்லவா பாடுவதற்கு?

லால்பகதூர் சாஸ்திரி போகிற காலத்திலே இரண்டு மூன்று ரயிலைக் கவிழ்த்து விட்டுப் போய் — தபால் தந்தி போக்குவரத்து மந்திரியாகி விட்டார். பெரிய கைகார ஆசாமியப்பா அவர்! பொதுத் தேர்தல் நெருங்கி விட்டதை அறிந்து "அரியலூர் அதிர்ச்சியால் ராஜினாமா செய்கிறேன்" என்று ஒரு 'அரசியல் ஸ்டண்ட்' நடத்தினார். "ஆகா, தியாகமே தியாகம்!" என்று காங்கிரசார் முரசு கொட்டினர். அந்தத் "தியாக"த் திரையிலேயே தபால் தந்தி மந்திரியாகி விட்டார். நமது அழகேசனை அந்த இரண்டு மாத காலப் பதவியை விடுவானேன்; மீண்டும் கிடைக்குமா கிடைக்காதோ என்று விடாப் பிடியாக மந்திரி வேலை பார்த்தார். விலைவையும் தேர்தலில் அனுபவித்தார்.

லால்பகதூர் சாஸ்திரி பதவியின் இறுதிக் கட்டத்தில் ரயில்கள் கவிழ்ந்தன.

ஜகஜீவன்ராம் பதவியின் ஆரம்பக்கட்டத்திலேயே ரயில்கள் மோதிக் கொள்கின்றன. தானே ஓடிப்போய் கீழே சாய்கின்றன.

ரயிலில் வருவதற்கு அச்சமாயிருந்தால் காரிலேயே வந்துவிடேன். கடிதம் கிடைத்ததா கிடைக்கவில்லையா என்பதைச் சொல்வதற்காக அல்ல தோழனே! உன்னையும் பார்த்துப் பல நாளாகிறதல்லவா—அதற்காகத்தான்!

மேலும், இனிமேல் நீ காரில் சென்னை வருவதற்கு கும்பகோணம்; அணைக்கரையெல்லாம் போய் சுற்றிக்கொண்டு வர வேண்டியதில்லை. கொள்ளிடத்திற்குப் பாலம் போட்டு விட்டார்கள். அதனால் வல்லம்படுகை வழியாக ஊருக்கு வழியில் சுலபமாக வந்து சேரலாம். முதலமைச்சர் காமராசர்தான் பாலத்தைத் திறந்து வைத்தாராம். அடுத்த பொதுத் தேர்தலுக்கும் இடைத்தேர்தலுக்கும் "கொள்ளிடம் பாலம்" காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு நல்ல தீனிதான்! "கொள்ளிடம் பாலம் கட்டிய காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள்!" என்று முழங்குவார்கள். "அந்தப் பாலத்தைத் திறந்து வைத்த காமராசருக்கு ஆதரவு தாருங்கள்!' என்று அடித்துக் கேட்பார்கள்,

பொது மக்களும், நாட்டில் நிறைவேற்றப்படுகிற திட்டங்களை காங்கிரஸ்தான் நிறைவேற்றுகிறது என நம்பிக் கொண்டிருக்கிறார்களே தவிர, இவைகளையெல்லாம் ஒரு சர்க்காரின் திட்டங்கள் என்று கருதுவதேயில்லை. பொது மக்களின் வரிப் பணத்திலே நிறைவேற்றப்படுகிற திட்டங்கள் என்பதை ஏனோ மறந்து விடுகிறார்கள். காங்கிரசாரின் ஊழல்களும், ஆடம்பரங்களும், அடக்குமுறைகளும்கூட இம்மாதிரியான திட்டங்களால் மறைக்கப்பட முயற்சிக்கப்படுகின்றது. மக்களிடம் வரி வசூலிக்கிற எந்தசர்க்காரும்செய்து தீரவேண்டிய காரியங்கள்தான் இந்தத் திட்டங்கள்! இவைகளும் தென்னாட்டைப் பொறுத்த வரையில் போதாது என்றுதானே அனைவரும் ஒப்புக் கொண்ட உண்மை!

1853-ம் ஆண்டிலேயே கொள்ளிடம் ஆற்றில் பாலம் இருந்தது. அது 1903-ம் ஆண்டு வெள்ளத்தில்தான் இடிந்து போயிற்று. அப்போதிருந்தே அதே இடத்தில் பாலம் கட்ட சர்க்கார் திட்டங்களைப் பரிசீலித்து வந்திருக்கிறார்கள். 1943-ம் ஆண்டு அங்கே ஒரு படுகைப் பாலம் கட்டத் தீர்மானிக்கப்பட்டு. யுத்த நெருக்கடியால் உடனடியாக வேலை துவங்காமல் நின்றது. ஆகவே, வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலேயே கொள்ளிடம் பாலம் இரண்டாவது முறையாகக் கட்டுவதற்கான முயற்சி துவக்கப்பட்டிருக்கிறது என்பது புலனாகும்! ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் "காங்கிரஸ்தான் இதைச் செய்தது" என்று பெருமைப்படல் சரியில்லை; வரி வாங்குகிற சர்க்கார் இதைக்கூடச் செய்யாவிட்டால் பிற என்ன இருக்கிறது என்பதை சுட்டிக் காட்டத்தான்!

தென்னாற்காடு மாவட்ட ஆட்சி மன்றமும், தஞ்சை மாவட்ட ஆட்சி மன்றமும் லட்சக் கணக்கான ரூபாய்களைத் தந்தும்—கொள்ளிடம் பாலம் கட்டிய செலவை சரிக்கட்டுவதற்காக, சுங்க வரி வசூலிக்கப் போகிறார்களாம். பாலத்தில் போகும் மோட்டார்கள், லாரிகள் எல்லாவற்றுக்கும் சுங்க வரியுண்டாம். நீ வருவதாயிருந்தாலும் சுங்கவரி செலுத்தி விட்டுத்தான் வர வேண்டும்.

தீப்பெட்டி வரி, எண்ணெய் வரி யென்று மிகப்பல வரிகளைப் போடுகிறார்கள். கேட்டால் திட்டங்களை நிறைவேற்ற வேண்டாமா; அதற்காகத்தான் வரி போடுகிறோம் என்கிறார்கள். நாம் கொடுத்த வரியிலே கட்டப்பட்ட பாலம் என்ற பூரிப்போடு அவ்வழி சென்றால் 'எடு சுங்க வரி' என்று மடியைப் பிடித்துக் கொள்கிறார்கள்.

திட்டம் வருமுன்னும் வரி—வந்த பின்னும் வரி—இந்த வரிகளால் கண்ட பலன்; விலைவாசிஉயர்வு! இவ்வளவுநீண்ட கடிதத்தை உனக்குநான் எழுதி விட்டேன். இதற்கு அஞ்சலட்டை போதாது; அஞ்சல் உறை வாங்க வேண்டும்—அதன் விலையோ விஷம்போல் ஏறி விட்டது. தொலையட்டும் என்று அதிக விலை கொடுத்து வாங்கி எழுதிப் போட்டாலும் அது போய்க் குறிப்பிட்டவருக்குச் சேருமோ சேராதோ என்ற ஐயப்பாடு! அஞ்சலகத்தில் அது பற்றி புகார் செய்தால், பதிவுத் தபால்களுக்குத்தான் நாங்கள் பொறுப்பாளி—என்று சட்டம் பேசி விடுகிறார்கள். அலுவலகத் தொழிலாளர்களை அணுகி, நிலையை விளக்கினாலோ "போங்க சார்! உங்கள் குறையைச் சொல்ல வந்து விட்டீர்கள்: எங்கள் குறையை யாரும் காதில்போட்டுக் கொள்வதே யில்லை" என்று மூக்கால் அழுகிறார்கள். அவர்கள் சொல்வதும் நியாயமாகத் தானிருக்கிறது. எப்படியோ சுதந்திர சர்க்காரின். தயவில் பொது மக்கள் அவதிப்படுகிறார்கள். விரைவில் தபால்ஊழியர்கள் வேலை நிறுத்தமும், ரயில்வே ஊழியர் வேலை நிறுத்தமும் தொடங்கிவிடுமேயானால் மக்கள் 'பூர்ண சுதந்திர'ப் பலனை அனுபவித்து விடுவார்கள் என்பதில் ஐயமில்லை. தபால் ஊழியர்களின் பக்கம் நமது அனுதாபம் என்றைக்குமிருக்கும்—அதுபோல் நமது தபால்களின் பக்கம் அவர்களது ஆழ்ந்த அனுதாபம் நீடித்து இருக்குமாக!

அன்புள்ள,
நண்பன்.

விற்பனையாகிறது!

ஆசிரியர்
மு. க. வின்
கவிதைநடைச்
சிறுகதையுடன்!
முத்தாரம்
ஜூன் இதழ்!

வாங்கி விட்டீர்களா?

அவர்கள் போராட்டம்!

தமிழகத்திற்கு "தமிழ் நாடு" என்று பெயர் சூட்ட வேண்டும்—என்பதற்காக சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் போராட்டம் நடத்தப் போவதாகப் படித்தேன்.

நான் அதைப் பார்த்து ஒருபுறம் மகிழ்ச்சியடைந்தேன்; மறு பக்கம் வெட்கப்பட்டேன். தமிழ் நாட்டிற்குத் 'தமிழ் நாடு' என்ற கிளர்ச்சியை நடத்த வடநாட்டிலுள்ள ஒரு லோகியாதான் வரவேண்டுமா?

தேர்தல் நேரத்தில் தமிழ் நாட்டில் சோஷலிஸ்டுகள், 'எங்களுக்கு யாருடனும் ஒட்டும்—உறவும் வேண்டாம்' என்று கூறி தி. மு. கழகத்துடன் போட்டியிட்டும், பூசலை ஏற்படுத்தியும் தேர்தலில் ஈடுபட்டார்கள்—இப்பொழுதும், நாங்களே தனித்துப்போராடுவோம்' என்ற வகையில் கிளர்ச்சியை நடத்துவார்களோ என்பதால்தான், 'நீங்கள் துவங்கும் கிளர்ச்சி வெற்றிபெறத் தக்க வகையில் நடத்தப்பட வேண்டும்' என்று கூறுகிறேன்."

—அறிஞர் அண்ணா.

அய்யோ; சித்த வைத்தியமே! உன் கதி இதுதானா?

சித்த வைத்தியம்—தென்னகத்தின் தொன்மையான வைத்திய முறை! முத்துக் கடல் கொண்ட தமிழகத்திற்கே சிறப்பாய் அமைந்து; முடி மன்னர்களால் தமிழோடு வளர்க்கப்பட்ட உன்னதமான மருத்துவம்!

ஆனால் அதைத்தான் காலால் மிதித்துத் துவைத்துவிட்டு; காணவும் மாட்டேன்—என்று சண்டித்தனம் புரிந்து வருகிறது டெல்லி அரசு! அதற்கு உறுதுணையும் புரிந்து; தமிழ் வைத்தியத்தைத் தூசென மதித்த டெல்லி அரசினரின் பாதங்களையும் பிடித்து உதவுகிறது. சென்னை அரசு!

சுதேசி வைத்திய முறைகளில் தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடத்தி; அவற்றின் தரத்தை உயர்த்துவதற்காக டெல்லி ஆட்சி பீடம் 1957-58-ம் ஆண்டிற்கு சுமார் நாலரை லட்சம் ரூபாய் மான்யமாக ஒதுக்கியிருக்கிறது!

இதைத் தொடர்ந்து ஆயுர்வேத வைத்திய முறையிலே ஆராய்ச்சி நடத்த விசேஷக் குழு வொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது!

யூனானி வைத்திய முறை பற்றி ஆராய்ச்சி செய்யவும் ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது!

அன்னிய முறையான ஹோமியோபதி பற்றியும் ஆராய்ச்சி நடத்த ஒரு குழு இருக்கிறது.

ஆனால் சித்த வைத்தியம் பற்றி...?

தீண்டுவார் இல்லை; தொடுவார் இல்லை!

ஆமாம்; புறக்கணிக்கப்பட்டு விட்டது பைந்தமிழ் வைத்திய முறை!

ஏன்?

சென்னையும் வற்புறுத்தவில்லை!

டெல்லியும் கவனிக்கவில்லை!

வீட்டுத் திண்ணையிலே அமர்ந்தபடி; தென்றலை ரசித்துக்கொண்டு காதலியின் மடியிலே சாய்ந்து கொண்டிருப்பவனுக்கு பசியோடு அழுது கொண்டிருக்கும் எதிர்த்த வீட்டுக் குழந்தையைப் பற்றி என்ன கவலை?

அதே நிலைதான் இங்கும்!

அகில உலகப் புகழென்னும் தென்றல் மோதிட; ஏகாதிபத்தியக் காதலனின் மடியிலே தலை சாய்த்துக் கொண்டிருக்கிறது டெல்லி மத்திய அரசாங்கம்!

நாமோ அடுத்த வீட்டுக் குழந்தை!

தன் குழந்தையாக இருந்தால்தானே பாசமும் பற்றும் ஏற்படும்!

நாம் டில்லியைப் பொறுத்த வரையில் அடுத்த வீட்டுக் குழந்தை; எடுப்பார் கைப் பிள்ளை!

❊❊❊ மொழி; கலை; கலாச்சாரம்—இவைதான் ஒரு தேசிய இனத்தை மற்றொரு தேசிய இனத்திலிருந்து பிரித்துக் காட்டி—நாம் தனியானவர்கள்; நமக்கு ஒரு தனி நாடு வேண்டும்—என்று கேட்கத் தூண்டும் குணநலன்கள்!

அதைப் போலவே தென்னகத்தைப் பொறுத்த வரையில் சித்த வைத்தியம் நமக்கே உரித்தான முறை!

தமிழினத்தை அடையாளம் காட்டும் ஒரு பண்பு நலன் சித்த வைத்திய முறை!

எனவே தனித்து நிற்கும் அந்த முறையை அழித்துவிடப் பார்க்கிறார்கள் வடநாட்டு ஏகாதிபத்தியக்காரர்கள்!

❊❊❊ பண்டைக் காலத்தில் எதிரிகள் நாட்டின்மீது படையெடுத்து; அவர்கள் தோற்றுவிட்டால்—தோற்ற நாட்டு மக்களின் கூந்தலை அறுத்து; அவைகளைக் கயிறாகக் கட்டி; அவற்றை உபயோகித்து கழுதைகள் பூட்டப்பட்ட ஏரினால் உழுவார்களாம்!

—மீண்டும் எதிரிகளைத் தலையெடுக்க வொட்டாமல் செய்கின்ற ஏற்பாடாகும் இது!

❊❊ அதே முறைதான் சிறிது மாற்றத்தோடு நடைபெறுகிறது. இங்கே!

எதிரி என்று பிரகடனப் படுத்திவிட்டு; போர் தொடுத்து; தோற்கடித்துப் பிறகு கழுதை ஏர் பூட்டிப் பூண்டோடு ஒழித்தார்கள் முன்பு!

இப்போதோ ஏக இந்தியா—என்ற உறவு கொண்டாடி; நண்பர்கள் போல் நடித்துக்; கூடிக் குலாவி—தோள்மீது போட்டிருந்த கையை உபயோகித்தே குரல் வளையை நெறிக்கிறார்கள்!

—இதற்குத் தக்கதொரு எடுத்துக் காட்டுதான் சித்த வைத்தியப் புறக்கணிப்பு ஆகும்!

❊❊ அய்யோ, சித்த வைத்திய மருத்துவர்களே! அன்னையின் விலங்கொடிக்கும்வரை நீங்கள் இந்தக்கொடுமைகளைத் தாங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும்! அந்தோ; சித்த வைத்தியமே! உன் கதி இதுதானா?

விநியோகஸ்தர்கள்:

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்யாகுமரி ஜில்லாக்கள்:
—ஜயந்தி பிலிம்ஸ், மதுரை. மலேயா :—கியான் சிங், சிங்கப்பூர்.

கற்பனை உரையாடல்

★ தமிழுக்கும் தமிழருக்கும் தீங்கிழைப்பதில் போட்டியிட்டுக் கொண்டு செயலாற்றும் இரு தேசத்துப் பிரதமர்கள் சந்தித்துக் கொள்வதாகச் செய்யப்பட்ட கற்பனை!

பண்டிதரும், பண்டார நாயகாவும்!

நேரு: ஆஊசி! ஆப்கி தபீயத் கைசா கை?

பண்டார நாயகா: (நேரு இந்தியில் பேசியதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாமல், சிங்கள மொழியில்) என்ன சொல்கிறீர்கள்?... எனக்கு ஒன்றும் புரியவில்லையே!

நேரு: (மீண்டும் இந்தியில்) க்யா?...க்யா?...(பிறகு ஆங்கிலத்தில்) ஓகோ! மறதியாக இந்தியில் பேசிவிட்டேன்! மன்னிக்கவும்!

நாயகா: (ஆங்கிலத்தில்) எதற்கு மன்னிப்பு? நான் கூடத்தான் மறதியாகச் சிங்களத்தில் பேசிவிட்டேன்! உங்களைப் பார்த்துக் கற்றுக் கொண்ட பாடம்தானே இது?

நேரு: என்னைப் பார்த்தா? எதைக் கற்றுக்கொண்டீர்கள்?

நாயகா: ஆமாம்! தாங்கள் இந்தியாவில் இந்தியைமுழங்கச் செய்வதைப் பார்த்தே இங்கு சிங்கள மொழியைத் திக்கெட்டும் முழங்கச் செய்திருக்கிறேன்! நீங்கள் பலப்பல மொழி பேசுபவர்கள் தலையில்இந்திச்சுமையை ஏற்றவில்லையா? நான் தங்களின் அஞ்சா நெஞ்சத்தைப் பார்த்தபின்பே சிங்களத்தை ஆட்சி மொழியாக்கினேன்! இப்பொழுது தவியாய்த் தவிக்கிறேன்! நீங்கள் எப்படித்தான் சமாளிக்கிறீர்களோ? இங்குள்ள தமிழர்களையே என்னால் அடக்க முடியவில்லை!

நேரு: (துள்ளிக் குதித்து) வாட்?...அந்தத் தமிழர்கள்! தி. மு. க.! நான்சென்ஸ்! காட்டுமிராண்டிகள்! அவர்களைப் பற்றி என்னிடம் பேசாதீர்கள். எனக்கும் அவர்கள் தொல்லையே பெரிதாக இருக்கிறது!

நாயகா: நீங்கள் நினைப்பது போல் அவர்கள் முட்டாள்கள் அல்ல! அவர்களில்தான் அறிவு மிகுந்த தலைவர்கள் உள்ளார்கள்! மேலும் தமிழர்கள்தான் இந்த இலங்கைத் தீவையே வளம் கொழிக்கும் தீவாகச் செய்தவர்கள் மேலும் இந்த நாட்டை ஆண்டவர்களும் அவர்களே! இப்பொழுது நாம் போய்ப் பார்க்கப் போகிற அனுராதபுரத்தை ஆண்ட எல்லாளச் சோழன் கூட ஒரு தமிழ் மன்னனே! அவனை அடிமைப்படுத்த முயன்ற சிங்கள மன்னர்கள் தோல்வியே கண்டார்கள்! அத்துடன் அந்தத் தமிழ் மன்னன் தன்னலம் கருதாது நடு நிலைமைத் தவறாது ஆட்சி புரிந்தான்!

நேரு: அப்படியா?...ஊம்...... என்ன இருந்தாலும் ஒரு காலத்தில் அவர்கள் எல்லாம் வட இந்திய இராமபிரானுக்கு அடிமைப்பட்டவர்கள்தானே!

நாயகா: (கோபத்தால் துள்ளிக் குதித்து) என்ன? என்ன சொன்னீர்கள்?...... யார் அடிபணிந்தவர்கள்? இலங்கை வேந்தன் இராவணனைக் குறிப்பிடுகிறீர்களோ! இராவணன் வீர மரணம் அடைந்தவன்— அதைத் தாங்கள் மறந்து விட்டுப் பேசுகிறீர்கள் போலும்! நாங்கள் வட இந்தியாவுக்கு மட்டுமல்ல; இந்த

உலகத்தில் யாருக்குமே அடிபணிய மாட்டோம்!

நேரு: (சிரித்துக் கொண்டே) அடடா! கோபப்படாதீர்கள்! அந்த இராவணன் என்ன சிங்கள மன்னனா என்ன? அவனைப் பற்றி இழிவாகப் பேசினால் உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம்?

நாயகா: யார் அரசனாக இருந்தாலும் இலங்கைத் தீவைப் பற்றி அவமானமாகப் பேசினால் என் இரத்தம் கொதிக்க ஆரம்பித்துவிடுகிறது! அதிருக்கட்டும்; இந்தத் தமிழர்கள் கொட்டத்தை அடக்குவது எப்படி?

நேரு: தமிழர்கள் கொட்டத்தை அடக்க ஒரே வழி... தி. க...இல்லை, இல்லை... தி. மு. க...வை இலங்கையில் நுழைய விடாமல் செய்வதுதான்!

நாயகா: ஏன்? தி. க. வைக் கூறிவிட்டுப் பிறகு மறுத்து விட்டீர்கள்! தி. க. விலிருந்து பிரிந்தவர்கள்தானே, தி. மு. க.?

நேரு: அப்படியா? இருந்தாலும் அந்தத் தி. க. தலைவர் இந்தத் தேர்தலில் காங்கிரசை ஆதரித்தார்! அது மட்டுமல்ல; அவர் மொழி வெறி கொண்டவரல்ல: பரந்த நோக்கம் கொண்டவர்!

நாயகா: தி. க. தலைவர் ஈ. வெ. ரா. பரந்த நோக்கம் கொண்டவரா? எப்படி?

நேரு: ஆமாம்! அவர் "தமிழர்கள், யாவரும் ஆங்கிலத்தை நன்கு கற்றுக் கொண்டு, தமிழை மறந்துவிட்டு, ஆங்கிலத்திலேயே பேசவும் எழுதவும் செய்தால் நான் மிக மிக மகிழ்ச்சி அடைவேன்!" என்று எழுதியிருக்கிறார்! ஆனால் தி. மு. க. தோழர்கள் மொழிப்பித்து கொண்டவர்கள்! தமிழ் வெறி கொண்டவர்கள்! அவர்களை இலங்கையில் அடி எடுத்து வைக்க விட்டீர்களோ, வந்தது ஆபத்து!

நாயகா: விடுவேனா? இனி அந்தத் தி. மு. க. கட்சியை இலங்கையில் அழித்து விட்டுத்தான் மறு வேலை! நீங்கள் எங்கே தமிழர்களுக்குப் பரிந்து கொண்டு பேசுவீர்களோவென்று நான் பயந்து போனேன்!

நேரு: நானா? தமிழர்களுக்கா? ஒருக்காலும் இல்லை! ஒரு காலத்தில் எங்களவாள் தலையிலே கல்லை ஏற்றி அவமானப் படுத்திய அந்தத் தமிழர்களுக்கா நான் பரிந்து பேசுவேன்? எங்கள் நாட்டு இமயத்திலே கொடி பொறித்து எங்களை அவமானப் படுத்திய அவர்களுக்கா என் சலுகை? அங்கே எத்தனை புயலடித்தன? எத்தனை ரயில்கள் கவிழ்ந்தன? ஆனால் நான் அங்கு போய் எட்டிப் பார்த்திருப்பேனா? இலங்கைத் தமிழர்களை நீங்கள் எது வேண்டுமானாலும் செய்யுங்கள்! சிங்களக் குண்டர்களை விட்டுத் தாக்குங்கள்! நான் "ஏன்?" என்று கேட்கிறேனா என்று பாருங்களேன்!

நாயகா: அப்பா! இனி எனக்குக் கவலையில்லை! உங்கள் மனது இன்றுதான் எனக்குப் புரிந்தது! ஆதலால்தான் வரும்போதே, "தமிழர் பிரச்சினை பற்றிப் பேசப் போவதில்லை!" என அறிக்கை விட்டு விட்டு வந்தீர்களா?

நேரு: ஆமாம்! அது மட்டுமல்ல; இன்னும் இரண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு, வட இந்தியாவில் பலப்பல தொழில் நிலையங்களை ஏற்படுத்திக் கொண்டு அந்தத் தமிழர்களை ஓட்டாண்டியாக்கி நான் என்ன பாடு படுத்தப் போகிறேனென்று பொறுத்திருந்து பாருங்களேன்!

நாயகா: என்ன இருந்தாலும் உங்கள் சயர்த்து யாருக்கு வரும்? சாணக்கியர் பிறந்த நாட்டில் பிறந்தவரல்லவா நீங்கள்? இராமரின் சீடரல்லவா?...ஆனால் என் பாடுதான் ஆபத்தால் இருக்கிறது!

நேரு: ஏன் இப்படி பயந்து சாகிறீர்கள்? நீங்கள் தென்னாட்டு தி. மு. க.வை இங்கே நுழைய விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!

நாயகா: தி. மு. க. என்ன? தமிழரசு கழகமென்ன? எல்லாவற்றையும் ஒரு கை பார்த்து விடுகிறேன்! நீங்களிருக்கும் வரையில் எனக்கென்ன பயம்? அடடே! நேரமாகி விட்டதே!

நேரு: தமிழர்களைப் பற்றிப் பேசப் போவதில்லையெனக் கூறி விட்டு முழுக்க முழுக்க அவர்களைப் பற்றியே நேரம் போனது கூடத் தெரியாமல் பேசிக்கொண்டிருந்துவிட்டோமே!

—ஆனந்தன் பி. எஸ். சி.

உடனே தேவை!

அச்சக அனுபவமும் நன்றாக இயந்திரம் ஓட்டத்தெரிந்த 'மெஷின்மேன்' உடனே தேவை! நேரில் விண்ணப்பிக்கவும்.

—நிர்வாகி 'முரசொலி'



தமிழ் தந்த இன்பம்

இதிலே தமிழ் இலக்கியங்கள் பற்றிய நான்கு கற்கண்டுக் கட்டுரைகள் இருக்கின்றன.

'சிந்தாமணி தந்திடும் நந்தா விளக்கு' என்னும் தலைப்பில் மதுரை தியாகராயர் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. அ. கி. பரந்தாமனுர் சிந்தாமணிக் காவியத்தை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிருர்.

'வான்புகழ் மேகலை' என்ற பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரையார் கட்டுரை ஒரு சிறந்த மணிமேகலை ஆராய்ச்சி.

"புத்தர் விழாவை யார் யாரோ கொண்டாடியது கண்டு தமிழரும் கொண்டாட முனைந்துள்ளனர். ஆனல் மனித உலகில் பாதிப் பேர் கிட்டத்தட்ட 100 கோடிப் பேரான புத்த சமய உலகினருக்குத் தமிழகம் அளித்த செல்வத்தை, மணிமேகலைக் காப்பியத்தை. அவ்விழாநாளில் தமிழர் நாளில் நினைத்ததில்லை"— என்று ஆசிரியர் கூறுவது குறிப்பிடத்தக்கது

அடுத்த கட்டுரையை புதுக் கல்லூரி' தமிழ் விரிவுரையாளர் திரு. நா. பாண்டுரங்கன் தீட்டியிருக்கிருர். 'நன்னன் மலையில் நாளும் திருநாள்'—பத்துப் பாட்டுப் பண்டைத் தமிழர் வாழ்க்கையே விழாவாக இருந்த நிலையை அலங்காரத் தமிழ் நடையில்—அந்த நாளும் வந்திடாதோ என்று ஏங்கத் தக்க விதத்தில் படம் பிடித்திருக்கிருர், ஆசிரியர்.

கடைசிக் கட்டுரையை மதுரை தியாகராயர் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. சுப. அண்ணுமலை வரைந்துள்ளார். 'குறுந்தொகை யமுது'—குறுந்தொகையின் அருமை பெருமைகள் கூறுகிறது.

மொத்தத்தில் பள்ளி மாணவர்களுக்குப் பெரிதும் பயன் தருவது இந்தப் புத்தகம்.

விலை ரூ. 1.

கிடைக்குமிடம்:

அருணுேதயம்,
சென்னை 14.

நான் கண்ட பெரியார்

எழுதியது: கோவை அ. அய்யாமுத்து.

பெரியார் 'ராமசாமி அவர்கள் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் சிலவற்றை திரு கோவை அய்யாமுத்து இதில் எழுதியிருக்கிருர். எழுதியிருக்கிருர் என்பதுகூட அவ்வளவு பொறுத்தமல்ல—பெரியாரை அய்யாமுத்து திட்டியிருக்கிருர்; பாராட்டியிருக்கிருர் என்றுதான் கூறவேண்டும்! ஏனெனில் அந்த பல முனைகளிலிருந்தும் பெரியார் படம்பிடித்துக் காட்டப்படுகிருர்!

குளிப்பதைப் பெரியார் வெறுப்பது முதலான வேடிக்கைச் சம்பவங்கள் முதல்; காசு பணம்மீது அவருக்குள்ள 'காதல்'; யாரையும் நம்பாத அவரது 'பெருந்தன்மை'வரை எல்லாம் இதில் இருக்கின்றன.

"நாயக்கரின் குணத்தை நன்ருய் அறிந்திருந்த நான், அன்று அவரிடம் கோபித்துக் கொண்டு, நான் ஏற்றிருந்த பொறுப்பை ('குடியரசு' ஆசிரியர் பொறுப்பை) தட்டிக் கழித்து வந்தது, வடிகட்டின முட்டாள்தனம் என்று பின்னல் உணர்ந்தேன்"—என்று திரு அய்யாமுத்து எழுதியிருப்பதைப் புத்தகம் படிப்போர் கோடிட்டு வைக்க வேண்டும்.

இந்த ஏட்டின் மூலம் பெரியாரைப்பற்றி மட்டுமல்ல; திரு அய்யாமுத்துவின், "'அரசியல்' பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்!

விலை—ரூ. 0.75

கிடைக்குமிடம்:

'தமிழகம்'
59, பிராட்வே, சென்னை—1,

பிறைவானம்...

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

"ஒ, யானைக் குட்டி!"—இது மற்ருெருவன்!

"ஓகோ...ஓகோ!..." என்று காட்டுக் கூச்சலாகக் கத்திக் கொண்டே புழுதி மண்ணைக் கிளப்பி விட்டுக் கொண்டு ஓடியது ஒரு படை!

பார்வதியின் கண்களில் அருவி யென நீர் வழிந்தது. வீட்டை நோக்கி ஓட்டமாக ஓடினுள். அம்மாவிடம் போய் முறையிட வேண்டுமல்லவா?

ஆனல்...அம்மா மட்டும் என்ன வாம்? அன்று அவளும்தானே பார்வதியைத் திட்டினுள்!

"அம்மா! அம்மா! இந்தக் குமரனைப் பாரும்மா! என்னைத் திட்டுராம்மா!..." என்ருள் கண்களைக் கசக்கியபடியே!

"உனக்கு வேறு வேலை என்னடி இருக்கு! எப்பப் யார்த்தாலும் அவன் மேலேயே கோலிசொல்லிக் கிட்டுருக்கியே! அவன் உன்னை விட எத்தனை வயசு சின்னவன்!... போ...போ..." என்று அவளையே திட்டினுள் அம்மா! அதுமட்டு மல்ல; ஒன்றுமே அறியாதவன் போல் உள்ளே நுழைந்த குமரனையுமல்லவா பாசமுடன் தூக்கிக் கொண்டு போனுள்!

மற்ருெரு நாள்......

அக்காவுக்குத் திருமணம்! வீட்டிலே எல்லோருக்கும் புதிய உடைகள் வாங்க துணிக் கடைக்குச் சென்ருர்கள். எல்லோருக்கும் கண்ணைப் பறிக்கும் பச்சைக் 'கலரி'ல் சட்டைக்குத் துணி எடுத்தார் அப்பா! ஆனல் அம்மாவோ, "ஏன் எல்லோருக்கும் பச்சைப் பட்டே எடுக்கிறீர்கள்? பார்வதியின் கருப்பு உடம்புக்கு அது நல்லாயிருக்காதே; அவளுக்கு மட்டும் 'வெண் பட்டு' எடுங்கள்!" என்ருள்.

பார்வதிக்கு 'திக்' கென்றது. வீட்டிலே எல்லோருக்கும் ஒரு வர்ணம்; ஆனல் அவளுக்கு மட்டும் தனி வர்ணம்! ஏன்?

வீட்டிலே எல்லோருக்கும் ஒரு உரிமை; அவளுக்கு மட்டும் தனி உரிமை! ஏன்?

அவள் கருப்பு!

அந்தக் கரிய நிறம்தான் அவளை வீட்டிலுள்ள அத்தனை பேரிலும் வேருனவளாக—தனிப்பட்டவளாகப் பிரித்துவைக்கிறது. இடையிலே பெரும் பள்ளமே—படுகுழியே இருப்பதாக அவள் எண்ணினுள்.

அந்த வேதனையை அவளது குழந்தை நெஞ்சு எப்படித் தாங்கிக் கொள்ளும்? அத்தகைய வலிமையற்ற பார்வதியின் உள்ளம்தான் அவளை வீட்டைவிட்டே துரத்தி விட்டது. எங்கேயோ—எல்லையில்லா சூன்ய வெளிநோக்கி அந்த சூதறியா சிறுமி நெடும் பயணம் துவங்கி விட்டாள்!

நன்ருக இருட்டிவிட்டது-நடுநிசி! பார்வதியால் அதற்கு மேல் நடக்க முடியவில்லை. இப்போது திடீரென்று பயம் வேறு அவளைச் சூழ்ந்து கொண்டுவிட்டது!

பார்வதி நடுநடுங்கும் இதயத்தில் கைகளைப் புதைத்துக் கொண்டு ஒரு மரத்தடியில் விழுந்து சுருண்டு படுத்து விட்டாள்.

அப்போது குயிலின் குரல்கூட அவளுக்குக் கொடும்புலியின் உறுமல் போலக் கேட்டது!

சற்று நேரத்திற் கெல்லாம் யாரோ அவளைத் தட்டி எழுப்புவது போல உணர்ந்தாள். கண்ணைத் திறக்கவும் அஞ்சி இருக மூடிக் கொண்டாள்.

அவள் எண்ணியதுபோல எழுப்பியது கொடிய எண்ணம் கொண்டவனுகத் தோன்றவில்லை. பார்வதி பயந்தபடியே எழுந்து உட்கார்ந்தாள்.

அவளது பரிதாபமான தோற்றத்தைக் கண்ட அவன், "பயப்படாதே, பாப்பா! நான் மிகவும் நல்லவன்! என்னுடன் வா!' என்று அழைத்தான். பார்வதியும் யோசிக்காமல் சென்ருள். அவன் பேச்சிலும் பரிவிலும் இழைந்தோடிய அன்பு அவளை நடத்திச் சென்றது; அவனுடன் அவனது குடிசையிலேயே இருக்கவும் செய்தது!

நாட்கள் இரண்டு நகர்ந்தன!

பார்வதியின் மனே நிலையில் சிறு மாற்றம் தோன்றியது!

குடிசைக்கு எதிரே இருந்த மரத்திலே ஒரு குருவிக்கூடு! அங்கே தாய்க் குருவியும், குருவிக் குஞ்சுகளும் உறவாடும் உவகைக்குரிய காட்சி அவள் உள்ளத்தில் ஏதோ ஒரு களங்கத்தை ஏற்படுத்திவிட்டது. ஆமாம்; பார்வதியின் உள்ளத்தில் எங்கேயோ ஒரு மூலையில் 'வீட்டுக் கவலை' தோன்றிவிட்டது!

இந்நிலையில் ஒருநாள்...

அந்த குடிசைக்குரியவன்—நல்லவன்; அன்புள்ளம் கொண்டவன் என்றெல்லாம் பார்வதியில் எண்ணப்பட்டிருந்த அவன்—தன்கோர சொருபத்தைக் காட்டிவிட்டான்.

தடுமாறிய நிலையில் குடிசைக்குள் நுழைந்த அவனைக் கண்டு பார்வதி முதலில் பயந்தே விட்டாள். என்ன அக்கிரமம்! பார்வதியின் உடம்பில் கிடந்த பொன் நகைகளைப் பறிக்க முயற்சித்தான் அந்தக் கொடியன்.

"ஐயோ!..." என்று வீரிட்டலறினுள் பார்வதி!

அவனே 'ஓகோ' என்று கோரமாகச் சிரித்து இடையிலேயிருந்து உருவினுன், பளபளக்கும் — நெஞ்சில் பயம் பாய்ச்சும் கத்தி ஒன்றை!

பார்வதியின் தொண்டை அடைபட்டுக் கொண்டது! குரலெடுத்துக் கத்தும், திறனிழந்தாள்! அதே கணம் அந்தக் குறுமதி படைத்த கொள்ளைக்காரனின் கூரிய கத்தி அவளை நோக்கி கணத்திற்குக் கணம் நகர்ந்து கொண்டே வந்தது.

பார்வதி என்ன செய்வாள்?

'குபீ'ரென்று யாய்ந்துவெளியே வந்தாள். தலை தெறிக்க ஓட ஆரம்பித்தாள்! அவளது கால்களோ அவளையும் அறியாது அவளது வீடிருந்த திசை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது...

★

யாரது?...அம்மாவா?... ஐயோ, அம்மாதான இது?...

படுக்கையிலே எலும்பும் தோலுமாய்,ஏக்கத்தின் உருவாய்க்கிடந்த அந்த உருவம் அம்மாவினுடையதா?

"ஐயோ, பார்வதி! என் கண்ணே! வந்துட்டியாம் மா!...என்னைத் தவிக்கவிட்டுட்டு எங்கேம்மா போயிருந்தே!..."

—அந்த இளைந்திருந்த உடலில் எங்கிருந்துதான் புதிய பலம் தோன்றியதோ தெரியவில்லை! படுக்கையிலிருந்து பாய்ந்துஎழுந்த அம்மா பார்வதியைக் கட்டி அணைத்துக் கொண்டாள்!

அன்னையின் அரவணைப்பில் சிக்கித் தவித்த அந்தக் குயில் குஞ்சின் நெஞ்சம் தாய்ப் பாசமென்னும் அணைப்பினல் வெண்புருக் குஞ்சாக மாறியது போன்ற எண்ணம் உருவாகிற்று. குற்ருலம் அருவியில் குளித்து எழுந்தது போன்ற உணர்வுகள் அவள் இதயத்தில் நடமாடுவதை உணர்ந்தாள்.

காக்கைக்குத் தன்குஞ்சு பொன் குஞ்சுஎன்பார்கள்! உண்மைதான்; அதிரூப அமராவதியும்; அவலட்சணத்தின் சின்னமும் ஒரு தாயின் வயிற்றிலே பிறந்திருப்பார்களேயானல் பெற்றெடுத்த அன்னையின் தராசுக்கோல் போன்ற தாய்ப்பாசத்தின் முன்னே அவர்கள் ஒரு முட்டையிலிருந்து வெளிவந்த இரு குஞ்சுகள்தான்!

—சோர்ணம்

கருப்புப் பெண்

நெஞ்செல்லாம் நஞ்சாக இருக்குமே சில தீகுணம் கொண்டவர்களுக்கு; அவர்களது இருண்ட இருதயத்தைப் போல வானம் இருட்டிக் கொண்டு வந்தது. ஆங்காங்கே கண் சிமிட்டிக் கொண்டிருந்த தாரகைகள் 'எங்களுக்கு ஒளி உண்டு; ஆனால் உலகிற்கு ஒளி தரும் திறனில்லையே!' என்று வெட்கப்படுவதைப்போல விட்டு விட்டுப் பிரகாசித்தன.

அந்த அந்தகாரமான நேரத்தில் ஊரைக் கடந்து—எல்லை அம்மன் கோயிலைக் கடந்து—நீண்டு நெளிந்து சென்றுகொண்டிருந்த அந்தப் பாதையில தன்னந் தனியாக ஓடிக்கொண்டிருந்தது ஓர் உருவம்.

"பார்வதீ...!"

ஓடிக்கொண்டிருந்த உருவம் 'சடக்'கென்று நின்றது; தன்னை யாரோ அழைப்பதாக அது எண்ணியது. ஆனால் கண நேரத்தில் வெறும் பிரமைதான் அது என்பதைப புரிந்துகொண்டு மீண்டும் ஓட ஆரம்பித்தது.

"ஆமாம்; வெறும் பிரமைதான்; பிரமைதான்! என்னை யார் அழைக்கப் போகிறார்கள்? "அய்யோ! என் கண்மணியைக் காணோமே! எங்கு சென்றாளோ! ஆறு குளத்தில் விழுந்தாளோ! நான் என்ன செய்வேன்?" என்று எனக்காக அழுத புலம்ப யார் இருக்கிறார்கள்? நான் எங்கு சென்றால் என்ன? எக்கேடு கேட்டால் என்ன?"—ஓடிக்கொண்டிருந்த பாப்பாவின் மனம் இப்படி ஓடிக் கொண்டிருந்தது.

சாலையோரத்து மரத்திலிருந்து கோட்டான் ஒன்று அலறியது; பார்வதி சிறிது நடுங்கி விட்டாள். சற்று நேரத்திற்கெல்லாம் குயிலின் குரல் ஒன்றும் எழும்பியது!

பறவைகளிலேயே பார்ப்பதற்கு விகாரமானவைகளில் ஒன்று குயில்! ஆனால்...அதன் குரல்! குயிலிசை; குயிலோசை என்றெல்லாம் மெய் மறந்து பேசுகிறார்களே; புகழ்கிறார்களே; என்ன உலகம்! கிளியைப் பிடித்து கூண்டில் அடைத்து அழகு பார்ப்பவர்கள் குயிலை மட்டும் ஏன் பார்க்க விரும்பவதில்லை? காரணம் அது கருப்பு! ஆமாம்; அதன் கரு நிறம்தான் அதை உலகிற்குவேண்டாததாகச் செய்து விட்டது!

பார்வதியின் அலை மோதிக் கொண்டிருந்த மனக் கடலில் தான் எத்தனை எத்தனை எண்ண அலைகள்!

"என் நிலையும் அப்படித்தானே! நானும் வேண்டாதவள்; யாருக்கும் வேண்டாதவள்; யாருடைய அன்புக்கும் ஆசைக்கும் பாத்திரமாகாதவள்; எல்லோருடைய அருவருக்கும் வெறுப்புக்கும் ஆளாகிவிட்டவள்! ஐயோ, நான் என்ன செய்வேன்? இனி நான் எதற்காக வாழவேண்டும்?"

—பார்வதியின் ஓட்டத்தில் இப்போது புதிய வேகம் காணப்பட்டது. சோர்வுற்ற உடல்—களைத்துப்போன கால்கள் — துவண்டு போன மனோ நிலை—ஆனாலும் எங்கிருந்தோ ஏதோ ஒரு சக்தி அவளை மேலும் மேலும் ஓட வைத்தது!

அவள் எங்குதான் ஓடுகிறாள்? ஏன்தான் ஓடுகிறாள்?

அவளை யாருக்குமே பிடிக்கவில்லையாம்! ஊரிலே யாரும் அவளைக் கண்டால் விலகிப் போகிறார்களாம்! ஏன்; தீண்டத் தகாதவர் வீட்டுப் பெண்ணோ என்று கேட்கிறீர்களா? 'எல்லோரும் ஒரு குலம்' என்பது உறுதியான பின்

இதற்கெல்லாம் காரணம் என்ன? பார்வதி இந்தக் கேள்விக்கு எதிர் கேள்வி ஒன்றை பல முறை கேட்டிருக்கிறாள். யாரை?

தன்னைத்தானேதான்! ஆனால் பதில் என்னவோ கிடைக்கவே இல்லை. இதோ, அந்தக் கேள்வியை—அதே விடை கிடைக்காத கேள்வியை—சாலையோர மரங்களைப் பார்த்து-சலசலத்து வீசும் காற்றைப் பார்த்து—நிர்மலமான வானவெளியை ப்பார்த்து—மறுபடியும் மறுபடியும் கேட்கிறாள்—

நான் கருப்பாக இருப்பது ஒரு மகத்தான குற்றமா?

இந்த வேதனையான வேறுபாடு தான் ஏது? ஆனாலும் பார்வதியை அவளது வீட்டிலுள்ளோர்கூட வெறுக்கிறார்களாம்; எல்லாவற்றையும்விட தாங்கிக் கொள்ளவே முடியாத பெரு வேதனை—பெற்ற அம்மாவே அவளை வெறுக்கிறாளாமே!

ஆமாம்; பார்வதி நிறத்திலே கருப்புதான்! அதைத்தான் குற்றம் என்று அவளைத் தலை குனியச் செய்து வருகிறார்களா மற்றவர்கள்? அத்தகைய 'குற்றவாளி'யாகிய அவள் அவர்களுடன் ஏன் வாழ வேண்டும்? ஆகவேதான் பார்வதி புறப்பட்டு விட்டாள், தன்னை அவமதிக்காத — ஆசையுடன் அரவணைக்க யாராவது இருக்கிறார்களா என்று தேடி!

அன்றைய பள்ளிக்கூடச் சம்பவம் பார்வதியால் மறக்கக் கூடியதா?

"கிளியின் நிறம் என்ன?" என்று கேட்டார் ஆசிரியர்!

"கதம்பம் சார்..."–என்று 'சட்'டென்று பதிலளித்தான் முன் வரிசையில் உட்கார்ந்திருந்த குமரன்.

"என்னடா, உளறுகிறாய்?..." என்று முன்னால் வந்தார் ஆசிரியர்.

"ஆமாஞ் சார்......நான் நேத்து பார்த்தேன சார் கோயில்லே...... கூண்டிலே வச்சிருக்காங்க சார்... அது ஒடம்பெல்லாம் நிறைய 'கலரா' இருக்கு சார்......அம்மா கூடச் சொன்னாங்க சார்......அது பஞ்சவர்ணக் கிளியாம் சார்...... அதுக்கு வாழைப்பழம்கூட நான் கொடுத்தேன் சார்......"—என்று தனது அனுபவத்தை பல 'சார்'களுடன்.மழலைமொழியில் பிட்டுப் பிட்டு வைத்தான் குமரன்.

"சரி, அது போகட்டும்......காக்கை என்ன நிறம்?" என்றார் ஆசிரியர்.

"அதுவா சார்?...வந்து...வந்து நம்ப பார்வதியின் நிறம் சார்!..."

குமரனின் இந்தப் பதில் அடங்கியதும் வகுப்பறை முழுதும் 'கொல்'லென்ற சிரிப்பொலி எழுந்தது.

பார்வதிக்கு 'திகீர்'ரென்றது. உடலெல்லாம் பற்றி எரிவது போன்ற உணர்வு எழுந்தது. வாய் விட்டு அழவேண்டும் போலிருந்தது.

இத்தனைக்கும் குமரன் வேறு யாருமல்ல; அவளுடைய தம்பியே தான்! தம்பியே அக்காவின் நிறத்தை வெறுக்கிறான்; அக்காவையே வெறுக்கிறான் என்றால் அவளால் தாங்கமுடியுமா, அதை? 'சடா'ரென்று வகுப்பறையை விட்டு வெளியேறினாள். பள்ளிக்கூடத்து விளையாட்டு வெளிக்கு ஓடினாள். ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு முகத்தை கைகளால் மூடியவண்ணம் விம்மி விம்மி அழுதாள்.

எத்தனை நேரம் அப்படி அழுது கொண்டிருந்தாள் என்பது அவளுக்கேத் தெரியாது. பள்ளிக்கூடத்துப் பெரிய மணி, 'டாண், டாண்' என்று ஒலித்ததும் சுய நினைவு பெற்றாள். பள்ளி முடிந்து விட்டது! புற்றிலிருந்து ஈசற் கூட்டம் வெளிப்படுவதைப்போல பாய்ந்தோடி வந்தனர் சிறுவர் சிறுமியர். அவர்களைப் பார்க்கவே வெட்கப்பட்டவளாய் பார்வதி வேறு வழியே நடந்தாள். ஆனால் விடுவார்களா அவர்கள்?

"டேய்...அதோ பாருடா அண்டங் காக்கை பறக்குது; ஆகாயத்திலே!..." என்றான் ஒருவன்.

"ஆகா...ஆகா! இப்பத்தான் லண்டனிலேயிருந்து மீனம்பாக்கம் வழியா வந்திருக்குடா...வெள்ளைக்காரன் பெண்ணுல்லே;என்ன சிகப்பு! என்ன...சிகப்பு! கண்ணைப் பறிக்குதே!..." என்று கத்தினான் இன்னொருவன்!

"ஏ, தார்ச் சட்டி!"—இது ஒரு குறும்புக்காரன்!

10-ம் பக்கம் பார்க்க

ஏமாற்ற எதிர் காலம்...?

"அடடா, யாரது? நீயா?...என்ன தம்பி, நலமாகத்தானே இருக்கிறாய்?..."

"நலம்தான் ஆசிரியரய்யா! ஆண்டுகள் இரண்டு கழிந்த பிறகும்கூட என் நினைவு தங்களுக்கு இருந்தமைக்கு—என்னைப் பாசமுடன் தழுவிக் கொண்ட பெருந்தன்மைக்கு என் நன்றி, ஐயா!..."

"உன்னை எப்படி மறக்க முடியும் தம்பி!...வகுப்பிலேயே—ஏன், பள்ளியிலேயே நீதானே தம்பி முதல்வன்! படிப்பில், பண்பில், பழகும் முறையில்—எல்லாவற்றிலும் நீ எல்லா ஆசிரியர்களாலும் 'சபாஷ்' பெற்றவனல்லவா! அப்பப்பா!...இப்போது நினைத்தாலும் என் உடல் சிலிர்க்கிறது; உள்ளம் பூரிக்கிறது!"

"ஆமாம் ஐயா, எல்லாம் உங்களைப் போன்ற வழிகாட்டி விழியோட்டும் கல்லாசான்களினால்தானய்யா!"

"அதிருக்கட்டும்; நீ பத்தாவது வகுப்பு முடித்த பிறகு நான் அப்பள்ளியிலிருந்து விலகினேன்; அந்தத் தேர்வில் நீ எப்படி மார்க்குகள் பெற்றாய்?"

"தமிழில் தொண்ணூறு!

"ஆகா, அப்புறம்?...ஆங்கிலத்தில்?..."

"எண்பது! கணிதத்தில் நூறு! இயற்கைப் பாடத்தில் தொண்ணூற்றி ஒன்று! சரித்திரம்-பூகோளத்திலும் அதேதான்!"

"ஆகா, ஆகா! தம்பி! எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லையே! நீ புத்திசாலி; மேலே மேலே படிப்பாய்! உயர்ந்த பட்டங்கள் பெறுவாய்! ஊர் மெச்ச; உலகு மெச்ச; விற்பன்னனுவாய்! புகழ் பெறுவாய்! நீ நலமுடன், வளமுடன்வாழவாழ்த்துகிறேன் தம்பி!...ஆமாம்; இப்போது எந்தக் கல்லூரி உன்னை விரும்பி அழைத்து இடம் கொடுத்து பெருமை பெற்றிருக்கிறது?...அதைச் சொல்!..."

"ஐயா, மேலே படிப்பதென்றால் ஆசை மட்டும் இருந்தால் போதுமா? வசதியும் வாய்ப்பும் வேண்டாமா?..."

"ஆமாம்; அப்படியானால்...?"

"நான் மேலே படிக்கவில்லை ஐயா!..."

"ஐயோ; அப்புறம்?..."

"இப்போது ஒரு அலுவலகத்தில் 'ஆபீஸ் பைய'னாக வேலை பார்க்கிறேன்...அதுதான் எனக்குக் கிடைத்த வேலை!"

[ஆசிரியரின் கண்கள் குளமாயின.]

என். கந்தய்யன், சென்னை-1

(?) குழந்தைகளுக்காக நடத்தப்படுவதாகச் சொல்லப்படும் பத்திரிகைகளைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

பெரியவர்களும் ஜீரணிக்கமுடியாத விஷயங்களை வெளியிடுவதும், சினிமா, நாடகப் பெண்மணிகளின் நாட்டியம், அழகு, உருவம், பருவம் பற்றிய கீழ்த்தரமான வர்

ணனைகளை எழுதுவதும், இளம் உள்ளங்களில் இழிதகை எண்ணங்களை வளரச் செய்யும் வகையில் கேள்வி பதில்களை வெளியிடுவதுமான காரியங்களில், ஒரு சில பத்திரிகைகள் ஈடுபடுகின்றன. குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் மீதுள்ள வெறுப்பையும் அடிக்கடி அந்தக் "குழந்தை" பத்திரிகைகள் காட்டிக் கொண்டே, தாங்கள் சமரச சன்மார்க்க வழிகாட்டி என்றும் தம்பட்டம் அடித்துக் கொள்கின்றன. ஒரு பத்திரிகையில் ஜீவானந்தம், தன் அழகற்ற மீசையை எடுத்து விட வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது—குழந்தைகளுக்கு இது எவ்வளவு முக்கிய விஷயம் என்று கருதுகிறீர்கள்? கூடுமான வரையில் குழந்தைப் பத்திரிகை நடத்துகிறவர்கள், குழந்தைகளை அறிவுலக மேதைகளாய் ஆக்குவதற்கான நல்ல கருத்துக்களை எளிய முறையில் ஆக்கித்தர வேண்டுமே தவிர, தங்களுடைய மேதாவித்தனத்தை பறைசாற்றிக் கொள்ளமட்டும் அந்தப் பத்திரிகைகளைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது! இளைஞர்களை எதிர்கால மன்னர்களாய் ஆக்க முயல வேண்டுமே தவிர, "மைனர்"களாய் ஆக்கிடக் காரணமாகி விடக்கூடாது குழந்தைப் பத்திரிகை ஆசிரியர்கள்!

குழந்தைகளைத் தவறான வழியில் கொண்டு செல்லும் அத்தகைய ஏடுகளைத் தம் மக்களுக்கு அளிக்கும் விஷயத்தில் பெற்றோர்கள் சற்று எச்சரிக்கையாய் இருப்பது நல்லது.

தணிகைமலை, பொள்ளாச்சி

(?) அண்ணாதுரைக்கு, "அ" என்பவரால் அறிஞர் பட்டம் கொடுக்கப்பட்டது என ஒருவர் கூறுகிறாரே; அது உண்மையா?

அப்படிக் கூறுகிறவர் மிஸ்டர் 'த' என்பவர்தானே! அதாவது 'தற்குறி'!

இமயவரம்பன், சென்னை—23

(?) தூத்துக்குடியில் முத்துக் குளிப்பதுபோல கன்யா குமரியில் முத்துக் குளிப்பது உண்டா? அங்கு முத்து கிடைக்குமா?

இப்போது அத்தொழில் அங்கில்லையாயினும் குமரிக் கடற் பகுதியில் விலை உயர்ந்த முத்துக்கள் விளைந்தன என்பதற்கு சரித்திர ஆதாரங்கள் பலப்பல உண்டு. 1524-ம் ஆண்டு அந்தப்பகுதியில் முத்துக் குளிக்கும் தொழில், போர்ச்சுகீசியர் வருகையால் சிறப்படைந்திருந்தது. சேர,

சோழ, பாண்டியரும் இத்தொழிலை வளர்த்தனர். ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகு, மதுரை நாயக்கர், எட்டயபுரம் பாளையக்காரர்கள், சேதுபதி ராஜா, ஆகியோர் இத்தொழிலை வளர்த்திருக்கின்றனர். குமரிக் கடலிலேயிருந்து இராமேசுவரம் வரையில் கடல் அடியில் முத்துச் சிப்பிகள் வாழும் பாறைகள் எங்கணும் இருக்கின்றன. இவற்றை அரசாங்கம் கவனித்துமுயற்சிஎடுக்குமாயின், இப்பகுதியில் ஏராளமான எழில் முத்துக்கள் கிடைக்கஏதுவாகுமென குமரி மாவட்டத்திலுள்ள பலரும் கருதுகின்றனர், இப்போது! கேளாச் செவி படைத்த நமது அரசு, அதைக் கேட்க வேண்டுமே!

வத்சலா, பசுமலை, மதுரை

(?) சென்னை மந்திரிகள் ஆடம்பரங்களை ஒழித்து விட்டார்களாமே; நீங்கள் பாராட்டுவீர்களா?

இந்தச் செய்தியிலிருந்தாவது அவர்கள் இதுவரையில் ஆடம்பரமாகத்திரிந்தார்கள் என்ற உண்மை வெளிப்பட்டு விட்டதல்லவா? அப்பாடா! நாம் அந்த ஆடம்பரங்களைச் சுட்டிக்காட்டிய போது நம்மீது காங்கிரஸ்காரர்களும் மந்திரிகளும் எவ்வளவு காய்ந்து விழுந்தார்கள்! ஆடம்பரங்களை ஒழிப்பது என்ற பெயரால் நேரு சர்க்கார் ஏதோ ஒரு கண் துடைப்பு வேலை செய்து வருகிறதே தவிர, இருதயபூர்வமாக எதுவும் நடைபெறவில்லை யென்பதே நமது எண்ணம்.

ஆண்டுதோறும் பத்து லட்சம் ரூபாய் பெறுகிற கவர்னர்களும், அவர்களுக்கு மிகப் பெரிய மாளிகைகளும், விருந்

துகளும், கேளிக்கைகளும், இது போன்ற வீண் விரயங்களும் தவிர்க்கப்பட்டு, மந்திரிகள் தங்கள் சம்பளத்தையும் குறைத்துக் கொள்ள வேண்டுமென்ற மக்கள்குரல் அவர்களால் மதிக்கப்பட்டதாகவே தெரியவில்லையே; இன்னும்!

'முரசொலி'
ஆண்டு சந்தா
உள்நாடு ரூ. 6—50
வெளிநாடு ரூ. 7—50
ஆறுமாத சந்தா
உள்நாடு ரூ. 4—0
வெளிநாடு ரூ. 4—50

ப. மதனகோபால், தென்காசி

(?) குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று கூறப்படுகிறதே எப்படி?

இரண்டுமே மாந்தரால் படைக்கப்படுகிறதல்லவா; அதனால் தான்!

கே. சந்தானம், நாமக்கல்

(?) ஓட்டல் மறியல் போராட்டத்தில் நாள்தோறும் மூன்று பேர் வீதம் கைது செய்யப்படுகிறார்களே; அவர்கள் எல்லாம் யார்?

அவர்கள் எல்லாம் தேர்தல் காலத்தில் காமராசர் வெற்றிக்கும், காங்கிரஸ் வெற்றிக்கும் மிகப் பெரும்பாடுபட்டவர்கள். கிருஷ்ணமாச்சாரியாரை அங்கும், வெங்கட்ராமனை இங்கும் மந்திரியாக ஆக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொண்ட இயக்கத்தைச் சேர்ந்த தொண்டர்கள்!

பி. கே. தம்பு, சென்னை-13

(?) நகீப்—நாசர், நேரு—ஷேக் அப்துல்லா—குறிப்பு தர முடியுமா?

நண்பர்களாயிருந்து நாட்டு விடுதலைக்கு முழு மூச்சாகப் போராடினார்கள். இன்றோ நகீப்பும், ஷேக் அப்துல்லாவும் சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள். நாசரும், நேருவும் நாடாளுகிறார்கள்.

மருதமுத்து, திருச்சி கோட்டை

(?) பச்சைத் தமிழர் பட்டத்துக்கு வந்ததும் நாட்டுக்குத் தமிழ்நாடு என நாமம் சூட்டுவார் என்றார்களே; என்ன ஆயிற்று?



"நாமம்" சூட்டவில்லை; ஆதரவாளர்கள் நெற்றியில் அழகாகத் தீட்டிவிட்டார்; அவ்வளவுதான்!

(?) நேரு மறுபடியும் சுற்றுப் பயணத் திட்டம் வகுத்து விட்டாராமே?

இதுவரையில் அவர் இந்தியாவில் தங்கியிருந்தாரே; அதற்காக ஆச்சரியப்படுவோம்!

விற்பனையாகிறது!

: புதையல் :

திரைக் கதை வசனப் புத்தகம்

விலை 8 அணா : : கழிவு 40 சத வீதம்

[தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன்பணம் அனுப்பவும். அல்லது வி. பி. யில் அனுப்ப வேண்டுமென்றாலும் தெரிவிக்கவும்.]

எம். கே. பதிப்பகம்,

த. பெ. 712. : : சென்னை—6.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம் 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.